# அருச்சுனன் பாசுபத அம்மானை

பதிப்பாளர்
ஏ. பாக்கியராஜன்

நெறியாளர்
ய. மணிகண்டன்
உதவிப்பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

# அருச்சுனன் பாசுபத அம்மானை

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பாளர்
**ஏ. பாக்கியராஜன்**

நெறியாளர்
முனைவர் **ய. மணிகண்டன்**
உதவிப் பேராசிரியர்



**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

# "சுவடியியலும் பதிப்பியலும்"

*2010-2011ஆம் ஆண்டிற்கான*
*பட்டயப் பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு*
*பதிவு எண் : 43011064*

**முனைவர் ய. மணிகண்டன்**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ் இலக்கியத்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை-600 005.*

## நெறியாளர் சான்றிதழ்

*சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் "**சுவடியியலும் பதிப்பியலும்**" பட்டயச் சான்றிதழுக்கான "**அருச்சுனன் பாசுபத அம்மானை**" எனும் தலைப்பிலான சுவடியை ஏ. பாக்கியராஜன் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.*

*நெறியாளர்*

*(**ய. மணிகண்டன்**)*

*நாள் : .2011*

*இடம்: சென்னை-5.*

**ஏ. பாக்கியராஜன்**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

## பதிப்பாளர் உறுதிமொழி

சென்னை பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் "சுவடியியலும் பதிப்பியலும்" எனும் பட்டயச் சான்றிதழுக்காக "அருச்சுனன் பாசுபத அம்மானை" ஆனது என்னுடைய சொந்த முயற்சியில் பதிப்பிக்கப்பட்டது என்று சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்

(ஏ. பாக்கியராஜன்)

நாள் : 2011

இடம்: சென்னை-5.

## பொருளடக்கம்

பதிப்புரை 6

நன்றியுரை 7

அருச்சுனன் பாசுத அம்மாளை 8

## பதிப்புரை

இந்நூல் பாண்டவர்களைப் பற்றிய நூலாக விளங்குகிறது. **"அருச்சுனன் பாசுபத அம்மானை"** என்ற இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இதனை படியெடுத்தவர் புலவர்.வையாபுரி, சண்முகநாதன் ஆவார். பாண்டவர்களில் ஒருவராகிய அருச்சுனன் பாசுபதம் பெற்ற கதையாக திகழும் இந்நூல் பாண்டவர்களின் பாத்திரங்களை கொண்டு சிறப்புடன் அமையப் பெற்றுள்ளது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள **"அருச்சுனன் பாசுபத அம்மானை"** (எண். R. *11167)* என்பது நான் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூலாகும்.

## நன்றியுரை

"**சுவடியியலும் பதிப்பியலும்**" என்கிற பட்டயப் படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பட்டயப் படிப்பில் செம்மையான முறையில் பயிற்சியளித்த பேராசிரியர் **வீ.அ**ரசு மற்றம் முதுநிலை விரிவுரையாளர்கள் **ய. மணிகண்டன், முனைவர் லதா, முனைவர் சி.இளங்கோ** அவர்களுக்கம் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

என்னை பெற்றெடுத்து, வளர்த்து, படிக்க வைத்துக் கொண்டிருக்கும் என் **அன்புத்தாய், தந்தைக்கும்** மற்றும் **அண்ணனுக்கும்** நான் கல்வி பயில பல்வேறு வகையில் என்னை ஊக்கமளித்து வரும் என் குடும்பத்தார்க்கும் என் **நண்பருக்கும்** நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி.

# அருச்சுனன் பாசுபத அம்மானை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக எண்.சு8643

படியெடுத்தவர் : புலவர்.வையாபுரி.சண்முகநாதன்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## இறைவணக்கம்

### விநாயகர்

பாண்டவர்க ளற்சுன்னா ர்பாசுபதம் பெற்ற கதை
நீண்ட புகள் வேத வியாசரென வுரைத்தரை
நீண்ட தந்திமுகவேள் தயாபரனே யிக்கதைக்கு
வந்துதவ வேணும் வரம். - குரு கடாட்சம்

### முருகன்

ஆறுமுகனை நாறுமலர் கொடு கூறுமடியவர்
பேறும் பெறுவரே, வாலை ஞான சரசுபதி ஏட்சிக்கலும்
ஹரி ஓம் நன்றாகக் குருவாழ்க! அருச்சுனன் பாசுபதம் அம்மானை

### விநாயகர்

1. முந்தி வினாயகனே முருக சரஸ்வதியே
கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே முன்னடவாய்
சத்தி கணபதியே தைய நல்லாள் புத்திரனே
வித்தைக்கு நல்ல வினாயகனே முன்னடவாய்
புத்தி மிகத் தந்தருளும் புண்ணியனே முன்னடவாய்
கச்சாயம் யெள்ளுருண்டை கடலை பொரி சக்கரையும்
அவல்பயறு தேங்காயும் அதிரசமுந் தேன் குழலும்
கொம்புக் கனி பழமும் கோதுபடர்ச் சக்கரையும்
வாழைப்பழமும் வகையான செங்கரும்பு

இந்த பலகாரம் யின்பமுடன் நான் படைப்பேன்
கூட்டி அமுது செய்யுங் குளக்கரைப் பிளள்யுடன்
பேழை வயிற்றோனே பெருமாள் மருகோனே
பாசுபத அம்மானை பண்பாகப் பாடுகிறேன், பிறர்
யெந்நெஞ்சிலேநீ யிருந்து யெனக்கு வரமருளவா
சொன்ன தமிழுக்குத் துணையாக நீயிருந்து
வாக்குத் தவறாமல் வரந்தருள்வா யீஸ்வரியே
தருமருக்கு நேரிளைய தனஞ்செய் மேல்பாடுகிறேன்
வறுமைகள் நீக்கி வரந்தாரு மெந்தாயே
சீருற் பணியும் செங்கதிரோன் உள்ளளவும்
வாணியுலகில் மழை பொழிய மண்ணிலுள்ளோர்
ஆகுரும் வாழ்கவென்று அரனார் மிக வாழ்க

2. தையலுமை வாழ்கத் தரணி நெடுமால் வாழ்க!
அய்யனும் வாழ்க அனுமார் மிக வாழ்க!
பஞ்சவர் வாழ்க! பாரிலுள்ளோர் தான் வாழ்க!
செஞ்சொல் மொழி பாஞ்சாலி சீராகவே வாழ்க!
தஞ்சமுட நினைத்த தரணியுள்ளோர் தான் வாழ்க!
பூமாரி பெய்யும் புவன மிகத் தழைக்க
சீராகவே வாழ்க! அருந்த வத்தோர் தான் வாழ்க!
தேங்காய்ப் பழமிளநீர் தினைமாவுந் தேனுடனே
பாங்காக நான் படைப்பேன் பரிவாயமுது செய்யும்
நீங்காமல் நெஞ்சகத்தே நின்று விளையாடுமையா
ஓனாரு சென்னி ஒலி திகழுஞ் செண்பகமும்
யீராறு தோளுமிலங்கு மணி மார்பும்
பன்னிரண்டு தோளும் பருதியொளி போல
சென்னி முடியழகுஞ் சீர்பாதந் தண்டையுடன்
செஞ்சடை கொஞ்சத் திருத்தணி வேலவனே!
அஞ்சவென வந்து அடியேனைக் காருமையா!
வெள்ளை நிறத்தானே வேதாவினாவிலுரை
தெள்ளுதமிழ் மானே திருமால் மருகோனே!

தாயே யென்னம்மே சரசுபதியேமுன்னடவர்
யென்னுடைய பிழை பொறுத்துக் காருமம்மா !
தூண்டா மணி விளக்கே சொற்பெரிய மாதாவே !
நீங்காமல் நெஞ்சகத்தே நின்று விளையாடுமம்மா
தங்கத் தமிழுடைய தார் வேந்தரேயுலகில்
திங்கள் குடையும் திருவின் அருள் பெற்றவளே !

3. பங்கமனு யென்தன் பாடல் பின் பொறுப்பீர்
ஆதிமரை வாழ்க ! அந்தணர் தான் வாழ்க !
வாழ்க்கை பாசர் வருகை
வேத வியாசர் விளம்புங் கதை கேட்டு
மீதியுள்ள செனமேசன் நெடுநேரம் போற்றி செய்து
சோதிதனை நினைந்து சொல்லுவாரன்னேரம்
புள்ளூரையுங் காட்டகத்தை போயங்கே தான்திரிந்து
யிரவுபகலும் எழிலுடைய மன்னவர்கள்
வரந்தாருமென்றும் மகாதேவரைப் போற்றி செய்து
பரமசிவனார் தன்பாதம் பணிந்திறஞ்சி
காணிதனிலத்திருனிருந்து கானல்தனில் நிறுத்தி
காரையுடன் சூரை கனியும் பசியாறி
ஓடும் வருஷம் ஒன்பதும் சென்ற பின்பு

4. பாறை தனில் படுத்துப் பஞ்சவரும் பத்தினியும்
வீட்டுப் பெண் பிள்ளைதனை நினைந்து விசாரமிட்டு
விசாரமிட்டு நிற்கையிலே வியாசர் முனி
ஆசார நேசமுடன் அருள் முனியும் வந்தாரே
நலம் வினாதல்
வந்ததொரு மாமுனியை மன்னவருங் கண்டெழுத்து
சிந்தை மகிழ்ந்து சிவமுனியைத் தெண்டனிட்டு
தெண்டனிட்டு மன்னவற்குத் திருநீறுதான் கொடுத்து
வண்டொத்த மாமுனியும் வாழ்த்தி யென் சொல்லுவான்
சீரான யிரந்திரபுரி செலுத்தியரசாண்டவர்கள்

பாறவனம் வந்தீர்கள் பரினாமமுங்களுக்கு
அரசாள வந்து செங்கோல் அரசாண்டமன்னவர்கள்
சுகமாயிருந்தீரோ சொல்லுமென்றார் மாமுனியும்.
.......சோள விருப்பம் தெரிவித்தல்

5. சந்தி வானன் நிஷ்டைகளும் சாஷ்த்திரமுந் தானோதி
அந்தி பகல் நீங்களாதரித்தீரிப்பீர்க ளோ
அறந் தழைக்க வந்தவற்கு ஆனவனவாசமென்று
மறந்து மிருந்தீறோ மன்னவரே நீங்களென்று
என்று சொன்ன மாமுனிக்கு ஏதுசொன்னார் பஞ்சவர்கள்
நின்று சிவபூசை நாங்கள் மறப்பதில்லை
திட்டமுடனுங்களுட சீர்பாதம் போற்றியென்று
இடருவரு மோதான் எங்களுட ஆண்டவனே
சங்கரனார் பாதஞ் சதிறாகப் போற்றி செய்து
உங்கள் கிருபையினாலுபதித் திருந்தோம் காட்டகத்தே
எங்களுடறாட்சியத்தில் யின்பமுடன் போயிருந்தோம்
பொங்கமுடன் நாங்கள் போற்றி அரசாண்டு

6. செங்கோல் செலுத்தும்வகை செப்புமையா மாமுனியே
வருத்தமுடன் நாங்கள் வானர சையர்ளுதற்கு
பொருத்தமும் நாலும் போதவே சொல்லுமென்று
தறுதனஞ் செயனுந்தன் மருந்தான் கேட்க (கெள்க்க)
சிவக் பதில்:
வாறாய் நீர் கேளுமென்று மாமுனியுமப்போது
திருமறைகளோ துஞ் சிவமுனியும் அப்போது
வருங்கருமம் பாண்டவற்கு வாய்திறந்துங்கெது சொல்வார்
கேளாய் நீ தர்மாவே கீர்த்தி உள்ள மன்னவனே
ஆளாலழகியனார் அர்ச்சனனாரிப்போது
சங்கரனார் கக்கலுக்குத் தவசுக்குப் போய் வரவோ
மங்கை பங்காளர் கையில் வரம்பெற்று நீயல்லோ

7. பொங்கு கடல் சூழ்ந்த பூமியெல்லாம் ஆளவல்லீர்
யீசுபரனைப் போற்றி செய்த இன்பமுடன் அர்ச்சுனனும்
பாசுபதம் பெற்று வந்தாலப் பாருவகையாளவல்லீர்
காசினியில் நூற்றுவரைக் கனகமுடி திருகி
கத்துருக்கள் தன்னைச் சமறாடி வந்த பின்பு
அத்திபுரியை அரசாள வல்லீர்காண் !
இந்தப் படியால் யிருக்குமது சாஷ்த்திரங்கள்
அந்த வகையை அடவாகவே யுரைத்து
மந்திரமும் சொல்லி வகையுமொழிந்த பின்பு
வந்த தொரு வேதமுனி வாழ்த்தி விடைகொடுத்து
சிந்தை மகிழச் சிவனருகில் போயிருந்து
நாரதர் பாதம் நன்றாகவே துதித்து

8. வேதங்களோதி யங்கே வீற்றிருந்தார் மாமுனியும்
அவர் காலை நோக்கி வணங்கல்
நீதியுள்ள பஞ்சவர்கள் நின்று வனந்தனிலே
ஆதி நாராயணனை அடிதொழுது போற்றியென்று
சீராகவே போற்றி சீர்பாதம்தான் போற்றி
பாதிரையும் புன்னையுடன் பத்திரிகள் தான் துளசி
சாதியுடன் மல்லிகையுஞ் சம்பங்கி முல்லைகளும்
பூவனத்திலுண்டான புஷ்பவகைகளெல்லாம்
சந்தண முங்குங்குமஞ் சாந்து பன்னீரும்
இந்த வகைகளெல்லாம் இன்பமுடன் கொண்டு வந்து
அந்தமுள்ள நாரணற்கு அச்சதைகள் பண்ணாலுற்றார்
நாராயணர் சரணம் நால்வேதமே கரணம்
பேறாயிரமுடைய பெருமானே சரணமைய்யா !

9. வாராய் நீ ஆண்டவனே வந்துதவ வேணுமென்று
பாராளும் பஞ்சவர்கள் பரமனாரயன் சேர்
சீராகப் போற்றி செய்து தெண்டனிட்டாரப் போது
சங்கூதுவார் பதியிலிருந்திடுங் கிருஷ்ணனுக்கு

ஆங்கவர்கள் சிவபூசை அடவாகத் தான் தெரிந்து
வாலாய் பஞ்சவர்கள் வரிசையுடன் பூசை செய்தார்
பார்க்க வேணுமென்று பாரளந்தான் நினைந்து
தவபூசை சத்திவான் தன் மருட பக்கலுக்கு
துவாரகா புரியை விட்டுத் துளசி மணி மார்பன்
மூங்கிவனஞ் டேந்து முல்லை வனந்தான் கடந்து
கொஞ்கு வனங் கடந்து குருக்கத்தி உள்புகுந்து
அந்த வனத்தில் அடவாகத்தான் வாழும்

10. காட்டானை சிங்கங் கரடி புலியுடனே
குட்டி மதவானைக் குன்றுபோலப் பன்றிகளும்
பெருத்திருக்குமான் மரையும் பேரண்டப் பட்சிகளும்
செருத்த புலியினங்கள் சீறிவரும் அவ்வனத்தே
ஆழியுடன் கடம்பை அதட்டி வனத்தே
கூளிகளுங் காழிகளுங் கூட்டமிடுமிவ்வனத்தே
அண்டரண்டத் தோணுத் தடவிப் பெருவனத்தே
தெண்ட காருண்ணியந் திரளாயிருண்டிடுமாம்
சந்தனக் கணகத்தில் தப்பாமலுள் புகுந்து
எந்த வகையால் வருகிறாநென பெருமாள்
ஆயிரம் பூதம் அழுக்குத் தணியுடுத்தி
வாயிலொரு பல்லும் பத்துவரண்டபளுவெலும்பு

11. நரைத்தலையும் நடுங்குங்குங்காரமுகத்துடனே
உரைத்திட்ட நரம்பது ஒன்பத கோணலுமாய்
எடுத்த பல்லுஞ் செவ்வாயும் ஏந்தியிட்ட பொஷ்தகமும்
உடுத்திய வேட்டியுடன் ஓங்கிய கூன்முதுகு
செண்டு போலக் கண்ணில் திரண்டிருக்கும் பூனைகளும்
குண்டு குண்டாய் வளைந்து கூனி நடை நடந்து
அறுந்தவப் பூண்ணூல் அகண்ட திரு மார்பழகும்
தொறுபல்லுச் சோழனை துவண்ட கிழவனுமாய்
பஞ்சுகள் போலே பருத்த குடுமையுடன்

சோதித் திருமார்பிலத் துளசி மணித் தாவடமும்
தேவர் பெருமாள் சிவபூசைப் பொட்டியுடம்
கோவினத்தை மேய்க்க நல்ல கோபால வேதியனாய்

12. ஆவினத்தை மேய்க்கும் அருளாளன் வாரானே
சதா கோடி சுற்கரண சங்கரனும் காட்டகத்தே
காதவளி வருகிறார் கரிய பெருமாளும்
பஞ்சாங்கஞ் சொல்லும் பார்ப்பாரி வளனவே
வேதங்கள் சொல்லும் விருத்திகளவனைப் போல
பாதம் பெருத்த பரமனுர யனரும்
அடியெடுத்து வைக்க ஆரனாளிக்கள் செல்லும்
ஒடிந்த கோல் தகையில் உலகளந்தார் தானூன்றி
சாலயிருண்ட தொரு பாலைவனந்தனிலே
கோலூன்றிக் கொண்டு கோபாலர் வருகையிலே பின்வினாவுதல்
பாலைவனத்திருந்து பஞ்சவர்த்தனையும்
வண்டுலவுஞ் சோலை வனத்திருந்த பாண்டவர்கள்

13. கண்டந்த வேதியரைக் கனத்த பிரியமுடன்
பாரளந்த வேதியரும் பாராளுந்தன் மருமே
சாஷ்த்திரங்கள் வல்ல சகாதேவர் தம்பியரே
வாய்திறநது தானழைத்து வரிசையுடன் தன்மறுவே
நீயிந்த சாஷ்த்திரத்தை நீசமாக ஆராய்ந்து
யென்னென்று கண்டறியோம் யிப்படிக் கொற்றவரே
நாள் பூப்போலே நரைத்த கிழவனைப் போல
உளனறிய தெண்டை ஒருவன் பிடித்துக் கொண்டு
வருகிறான் தம்பியரே வகையாக நீர்பார்த்து
நன்னூலுச் சாஷ்த்திரத்தை நன்றாக நீர்பார்த்து
யின்னேரம்வருங் காரியம் எனக்கறையச் சொல்லு மென்றான்
என் பதில் அண்ணர் சொலக் கேட்டு அறிவுள்ள சகாதேவன்

14. பன்னு தமிழ்ப் பொஷ்த்தகத்தைப் பார்த்து மிகயென் சொலுவான்
அண்ணாவே அண்ணரசே அறிவால் பெரியவரே

பொன்னே மேனியரே புண்ணியரே கேளுமையரே
வாராதொரு வேதியரை வரிசையுடன் தான்பார்த்து
ஆரென்று கேட்டீரே அண்ணா பரிபலா
வேதியரல்ல வையா வேறொருவர்தானு மல்ல
பன்னாள் நம்முடைய பங்கிலிறுந்தலவோ
சூதாட வேணுமென்று சொன்னதொரு பந்தயங்கள்
தாயாதி யோடே சபதங்கள் பேசியல்லோ
வாயாராச் சொன்னோமே வளநாடு தோர்வையென்று
பரவி துரியோதன் முன் பாஷையிட்டுக் கொண்டல்லவோ
ஆதீனமும் போச்சு அத்தனையுந் தோர்வையென்று

15. பாத்துப் பதறாதே பயந்தருதே பாசைகள் சொல்லையிலே
காத்திருந்து விட்டார்கள் கைநழுவி விட்டு நம்மை
நூற்றுவர்கள் பங்கில் நுழைந்து கொண்டு போயிருந்து
கூற்றுவனாய்த் தோக்கடித்த கோபாலர் வாரார்கள்
நாட்டைப் பிடுங்கித் துரியோதனன் கைகொடுத்து
காட்டகத்தே நாட்டிவிட்ட கண்பாவிராமனவன்
என்று சகாதேவன் யெடுத்துரைத்த சொற்கேட்டு
பெருமை ....ருமன் கூறல்
நன்று நன்றென்று நகைத்தாருந்தன்மறுந்தான்
வாநீர் காணதம்பி வடிவழகாயென்று
நாராயணரை நன்றாகச் சொன்னாயே
அடிபணிந்து சாமியற்கு ஆசாரம் பண்ணாமல்
குடிகெட நின்றாயே கோவலரே தம்மையிப்போ

16. உதாசனங்கள் சொன்னால் உரையாதோ நாரணற்கு
அவ்வார்த்தை அல்ல அறிவுடைய தம்பியரே
முட்டையிலே குஞ்சு முகிள் விரியாப் பாலகனே
பிட்டு வளர்த்து பிரபலங்கள் கண்டவறார்
வளத்த பெருமாளை வாய்வீரு பேசினாக்கால்
உள்ளத்தில் நினைந்தபடி உதவுமோ தம்பியரே !

மண்ணிலிரணியந்தான் மதியாமல் மாயவரை
அன்று உயிரிழந்த தறியாயோ தம்பியரே
மாவெலியும் அப்போ மதியாதிருந்தமையால்
காவலச் சிறையிருந்த கதை தானுங் கேளாயோ
மையணியு மேனியரை மதியாமலச் சுக்கிரீவன்
கையத்தலைமேல் வைத்துக் கடுகி நின்று தெண்டனிட்டு

17. வையகங்களேச பாவி கையிலே விடுபட்டான்
அலங்கிருத லட்சுமியை அசோகவனத்தில் வைத்து
இலங்கையிலே ராவணனும் இருந்த கதை கேளாயோ
வஞ்சனையால் மாயவரை வதைசெய்து கொல்லவென்று
கஞ்சனை வதைத்தவதை கண்டிருந்துங் கேட்டிருந்து
மற்றமதை யறிந்து மாயவரைத் தூசணித்தால்
சத்தியங்கள் தப்பிச்ச திரிளந்து போகாமல்
வேண்டாஞ் சகாதேவர் விட்டு விடுயிவ் வார்த்தை
ஆண்டவனைக் கண்டால் அடிதொழுது போற்றி யென்னாள்
சீறாமர் சித்தம்திரும்பியதே ஆனாக்கால்
பாராள நல்லபதம் பெறலா மென்றலவோ
தாரார்தனஞ்செயனும் தம்பியற்கு சொல்லியபின் வரவேற்று எங்கல்

18. நாராயணரை நன்றாகச் சொன்னாயே
வண்டாடுஞ் சீர் துளசி மாலையணி மாயவரே
கண்டந்தப் பஞ்ச வருங்கன்னி துரோபதையும்
கன்னியரும் பஞ்சவரும் கடுகியெழுந்திருந்து
வன்னமுள்ள புட்பம் வகையாய்த் தானெடுத்து
பாதம் விளக்கியவர் பட்டாடையால் துவட்டி
போதப் புனுகுடனே பூமலருந் தான் தூவி
தாம் பாளந் தன்னில் தனல் கொண்டு வந்தல்லோ
சாம்பிறாணித் தூபம் சதயற்குத் தான் கொடுத்து
மல்லிகை மலரெடுத்து மாயவரைப் போற்றி செய்த
முல்லை மலரெடுத்து முகுந்தனே போற்றியென்று

19. செண்பக மலரெடுத்துச் சீராமர் போற்றியென்று
கொன்றை மலர் எடுத்துக் கோவிந்தா போற்றியென்று
பாருமையா யெங்களுக்கு பாரிலத் துணையுமில்லை
காருமையா யெங்களைநீர் காறான மேனியனே
உம்முடைய தஞ்சமல்லாது ஒருவருமில்லையையா
செம்மையுடன் எங்களையும் சீறாகக் காருமைய்யா
தன்மறுந தம்பியருந் தாழ்ந்து தெண்டனிட்டு
அண்டமளந்தாரை அடிவணங்கித் தெண்டனிட்டு
தெண்டம் பணிந்தார்கள் சீருள்ள பத்தினியும்
யெல்லாருங் கும்பிட்டெழுந்திருந்து நிற்கையிலே இவன் பதம்
வல்ல சகாதேவன் மாயவரைத் தெண்டனிட்டு
சொல்லாத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன் மாயவரை

20. அய்யர் பெருமாளே அறியாமல் சொன்னதெல்லாம்
மாயவனே மாதவனே மண்ணளந்த நாயகனே
அய்யரே அச்சுதரே அரவணையில்கண் துயில்வாய்
கேசவனே நாரதரே நிறை மறையினுடப் பொருளே
தேசமெல்லாம் ஓரடியால் அளந்த பெருமாளே
அடியேன் நான் செய்த பிழை ஆயிரமே ஆனாலும்
நெடுமாலே அத்தனையும் நீர்பொறுக்க வேணுமையா
சரணம் பண்ண வேணுமென்று சகாதேவர் வருகையிலே
வாது சொன்ன சகாதேவன் வருகுறிகள் கண்டவவோ
தஏது மனந்தனிலே எண்ணுகிறாரோ பெருமாள்

21. அவ்விடத்தே பாண்டவர்கள் எல்லோருந்தான் கூடி
கபடத்த மேனியருங் கண்டு தொழுதார்கள்
தனியே சகாதேவன் தான் வரத்தான் காரணமென்
குனிந்து சரணம் பண்ணிக்குரவென்று மனதிலெண்ணி
மாலை கொண்டுவந்து வணங்கினாரப் போலையவன்
காலை வாரியிட்டுக் கடக்கப் போய் நிறுத்திடுவான்
தாவி யெடுத்துத் தழுவியே மாயவரும்

அன்புள்ள மன்னா அரிவால்ப் பெரியவரே
கும்பிட்டது போதுமென்று கோவிந்தரேது சொல்வார்ரில் மகிழ்ச்சி
ஏகமனத்துடனே யெல்லோருந்த தான் கூடி

22. தாகமுடம் முடைதாள் பணிய வேணுமென்று
காட்டில் மலரெடுத்துக் கைநிறையக் கொண்டு வந்து
நாட்டமுடன் சிவபூசை நன்றாச்சுதே நமக்கு
செய்யாமலருஞ் செண்பக மலருடனே
அய்வராலே பூசை அன்பாச்சுது நமக்கு
பாங்குடைய பஞ்சவர்கள் பத்திரிகள் கொண்டுவந்து
நீங்கள்செய்த பூசையினால் நீடூழி வாழ்ந்திருப்பீர்
வாழ்வீர் வளர்ந்திருப்பீர் வையகங்களுள்ள மட்டும்
ஆள்வீரே பஞ்சவரே அம்புசெய்த பூசையினால்
வாழ்த்தி விடை கொடுத்துமனம் மகிழ்ந்து மாயவரும்
சித்தித் தரும நந்திறத்தால் சேரிசிக் காணகொடுத்து

23. ஆசையுடனே தான் ஆய்வரும் பத்தினியும்
கேசரில் தாங்கி வாங்கிச் சிரசிலணிந்து கொண்டு
கொன்றை மலரெடுத்துக் கொண்டுவந்து மாயவற்கு
வானச் சிங்காசனத்தில் வரிசையுடன் ஏதானும் வைத்து
புத்தியுள்ள பஞ்சவர்கள் பூமரங்கள் தான்சொரிய
வெற்றிச் சிங்காசனத்தில் வீற்றிருந்தரே எப்பெருமாள் வேகண்ணுதல்
மாயன் முகுந்தன் மண்ணளந்த நாயகனே
ஆயர்குலத் தோனே அய்வரும் பாத்தேது சொல்வார்
கைகட்டி வாய்மூடிக் கரியோன் முகம்பார்த்து
வையகங்கள் தேரத்து வனவாசம் வந்தவவோ

24. உய்யும் வருஷமது ஒன்பதுதான் சேருதையா
வன்பவருஞ் சோலைவனங்களிலே தான் திரிந்து
ஒன்பது வருஷம் சென்றல் உண்மை சொல்வோமென்றிர்கள்
ஓயாத நூற்றுவரை ஒரு நொடியில் கொன்னு....க்கி
தாயாதிபயங்கான தரணிதான் ஆள்வதற்கு

வாய்திறந்து சொல்லுமையா மாயாவினோதகனே
அத்திபுரியை அரசுபதி ஆளுகைக்கு
காச்ச சொல்ல வேணுமைகாறான மேனியனே
என்று தன்மறாயன் எதிராகக் கேள்க்கையிலே
அன்று பெருமாள் அருளால் யென்சொலுவாள்
கண்ணன் அரிசி கேட்டல்:

25. நீங்கள் சொல்லும் வார்த்தை யென்னெஞ்சில் நுழையாது
நான் காடுகடந்து வர நாலாறு நாளாச்சு
ஆதரவு உங்களுக்கு அடவியிலே வந்தலவோ
கண்ணிருண்டு மெத்த கனத்த பதியாகுது காண்
உண்ணுமென்று படியரிசி ஒரு நாளில்தான் கொடுத்தால்
சமைத்துப் பசியாரிச் சாப்பிட்டு வந்த பின்பு
ஆக்கி அசனம் பண்ணி ஆவல் தெளிந்த பின்பு
பாக்கியம் வருங்குறிகள் பார்த்துமக்குச் சொல்லுகிறோம்
பாடியரிசி தான் கொடுக்க வல்வீறோபஞ்சவரே
ராம நாராயணரும் நலமான வாய்திறந்து

26. காமனுட தந்தைக் கரியோனுரைத்திடவே வெகுளி
வீம சேனன் கேட்டு வெகுண்டும் கர கோபமுடன்
ரோமஞ் சிலிர்க்கலங்கே ரோமங்கள் தான்தீர
மீசை துடிக்கவங்கே மேல் முனிகள் தான் தீர
ஆசையுள்ள அண்ணாவே அடியேன் சொலக் கேளுமையா
காட்டகத்திலே திரிந்து காய்கனிகள் தின்றுமங்கே
கேசவனார் சொன்னதொரு கேள்விதனைக் கேளுமையா
காட்டகத்திலே திரிந்து காய்கனிகள் சிக்காமல்
நாட்டைவிட்டு வந்தறியறோ நாரணரும்
வரிசை குலைந்து வனவாசம் வந்திட்டதே

27. அரிசிதனைக் கேட்டதொரு ஆகடியங் கண்டீனோ
....பதம் .....லாந்தலும் ...வு கொள்ள
சம்புனாலிலெரிந்தாலிப்பளங் கொண்டு வந்து

கொம்பிலொரு பழமாய்க் கொண்டு வந்து தாரேனான்
நாகமரமேறி நல்லபழங்கள் கொண்டுவந்து
தாகமுள்ள மாயவற்குத் தந்தந்த காவின் னேரம்
தின்பாறோ தின்னாறோ கேளுமையா அண்ணாவே
என்று சொன்ன விஷ்ட்டுணுவுக்கு ஏதசொன்னாரைவருமே
கன்று தனைத் தேடிவந்த காறாம்பசுப் போலே
வந்த வருத்தம் அறிவீரோ மன்னவனே
உன் தம்பிக்குக் கோபம் வருவானே திருமாவே

28. நாவல் பழமெடுத்து நன்றாகக் கொண்டுவந்து
ஆவலுடனே கொடுத்தலாகாதோ தர்மாவே
கோபமது கொள்ளாமனுக் கொண்டு வந்தாலாளதோ
என்று பெருமாள் எடுத்துரைத்த சொல்கேட்டு
மன்னர் புகழ் தன்மர் மத வீமாவென்றழைத்து
தொண்டாயுதமெடுத்துத் திறமாய்ப் பழமிறக்கி
கொண்டோடி வாருமென்று அனுப்பினார் தன்மருமே
மதவீமனோடி மறத்திலுச்சிக் கேறி
யிதமாய்ப் பழமிறக்கியிம தெண்டயுதந் தோளில்வைத்து
கொண்டு வந்து தெண்டனிட்டேன் கோலமதவீமன்

29. மண்டலத்தை வாரியுண்டோ மாயவருமப்போது
வாங்கியே மாயவரும் மதவீமன் கூடவர
பாங்காய் நதிக்கரையில் பசியாறி மாயவரும்
சாப்பிட்டுமிந்தத் தளுகைப் பிரசாதம்
கோப்பாக வந்தெடுத்துக் கொள்ளமதவீமன்
தளுகைப் பிரசாதம் தானெடுத்துக் கொள்ளுமென்றார்
அவ்வார்த்தை கேட்டு அறிவில்லர் வீமனவன்
ஒவ்வாத மனத்துடனே ஒரு வார்த்தை சொல்வானாம்
ஆரணியந் தன்னில் அரிசிதளைக் கேட்டு
கோரணியம் செய்தீகர கோபால நாரணரே

வளிதனிலேயேளு பயணந்தங்கி வந்தவர்களே
தளுகை வருவானேன் தாமரைப் பூ மேனியனே

30. அல்லஅல்ல வீமா அறியாமல் தோத்தாத சேவுகனே
பழங்காய்கனி கிழங்கு பலகாரமானாலும்
உள்ளம் குளுந்து சனம் உணறுமுதனாலும்
வளவில் வணங்குருருவாய் வசனம் சொல்வேன்கேள்
தளுகைப் பிரசாதம் தானுண்டு மீய்ந்தது கான்
இந்தப்பழத்தை யெடுத்த சனம் பண்ணுகிறாய்
அந்த முள்ள வீமாவென்று அச்சுதனும் சொல்லலுற்றான்
குந்தி பெற்ற வீமா கும்பிட்டடி வணங்கி
அந்தப் பழத்தை அமுது செய்தான் போர் வீமன்
நதிக் சுனையில் வாயலம்பி நன்று நீர்குடித்து
மதிகடந்து வந்தார் வட்டமுள்ள பாறையிலே

31. பொன்னின் சிருங்காசனத்தில் போயிருந்தார் எம்பெருமான்
..... வேண்டல் செங்கோலும் ராச்சியமும் செலுத்தி அரசாள
யெங்களுட ராட்சியத்தை யின்பமுடனாளுகைக்கு
திருந்திய செங்கோலும் செலுத்தி அரசாள
பொருந்தியருளும் புகலுமென்றார் பஞ்சவர்கள்
.....பெற செய்யக் கூறல்
அப்பப் பெருமாள் அய்வருக்குமேது சொல்வார்
உற்றபசிக் கன்னம் உண்ணாதிருக்கவேணும்
நித்திரைகள் நெஞ்சில் நினையாதிருக்க வேணும்
பெண்ணாசை பொன்னாசைபூவுலகில் மேலாசை
மண்ணாசை யெல்லாம் மறக்க வேணுமையா
ஆசை தனைநீக்கி அரிய தவமிருந்ததால்
ஈசுபரனார் வந்து யினிய வதங்கொடுப்பாள்
யித்தனையும் விட்டலவோ யீசருட பாதமல்லர்
பத்தியுடன் பூசை செய்தால் பாசுபதம் பெறலாம்

32. அத்திபுரம் அத்தனையும் அங்குள்ளராச்சியமும்
சுத்தமுடனாள வல்லீர் யென்று சொன்னார் மாயவரும்
.....செய்யப்ப...லும் திருமால் ...குத்தலும்
அந்த வகையை அடவுடனே தான் கேட்டு
சந்தோசமாகி அங்கே தன்பம் நெழுந்திருந்து
எவரைவிடப் போறோமென்று சொல்லித் தன்மருமே
தவறாத சத்தியவான் தான் போறேனென்று சொல்லி
கெங்கை தனில் மூழ்கிக் கெங்காசல முடித்து
செங்காவி வெட்டி சிரசிலே கட்டியயவர்
காவியு டுத்திக்க மண்டலமும் கைப்பிடித்து

33. பாதகுரடங்கே பரிவாகவே மதித்து
ஓதிய வேதமுடன் ஒரு தெண்டு தரணூணி
சீராமர் தன்னைத் திறமுடனே தெண்டனிட்டு
கெங்காஷ்தானமுடித்து கீர்த்தியுடன் பூசைபண்ணி
சங்கரனார் கையில்சரம் பெற்று மீண்டுவர
தங்காமல் நான் வரவே அனுப்புந் தயாபரனே
இவ்வகை தன்மர் யெடுத்துரைக்கத் தான்கேட்டு
செம்மையுடன் பார்த்துச் செகநாதர் ஏது சொல்வார்
அம்புவினை யாள அரசனே தர்மாவே
உன்பாகனாயகனார் உமைபாகர் பக்கலுக்கு

34. அம்புவரம் வாங்கி அரன்பக்கல் போனாக்கால்
தம்பி அர்ச்சுனர்க்கு சற்பரணந்தான் கொடுத்தால்
அம்பு நீ வாங்கி வந்தால் ஆருந் தேரிடப் போகாது
பாங்குடனே நின்று படைபண்ணவல்லீறோ
சம்மதிச்சு நின்று சமர் செய்ய வல்லீரோ
பொங்கமுடனே போர்க்களத்தில் போர்செய்ய வல்லீறோ
தங்காமல் போய்நீ சரம் பெற்றுவாருமென்று
செம்பவன வாய்திறந்து திரும்பியங்கேயென் சொல்லுவார்
தும்மைச் சடையோன் பாதம் தொழவே போனீறால்

உம்பர்கள் நாயகனார் உன்னை விடுவாரோ
சத்திய வானென்று சங்கரனுந்தேவர்களும்

35. பத்தியுடன் தெய்வப் பதத்திலிருந்தவர்காண
சங்கரனுக் தேவர்களும் தன்மரே உன்னைவிட்டால்
அந்தபடி நின்றுவிட்டால் யிந்த திரௌபதையாள்
பந்தமுடன் வந்த பரிபவங்கள் தீர
பத்தினி துகிலுரிந்து பாவங்கள் தீர்ப்பதென்றாள்
சிறியோர்கள் தாமிருக்கச் சிகமாளு மன்னவரில்
பெரியோர் செலுத்துவறோ பேறாலக் காரியங்கள்
தம்பியர்கள் தாமிருக்கத் தமையனோ போகுமவகை
முன்பு செய்து வந்த முடி மன்னர் நகையாறோ
யிதுவோ அறிவுனக்கு யியல்வான மன்னவனே

36. அவ்வார்த்தையல்ல அமர்ந்திருவென்றார் மாயவரும்
......படவும் .......
எத்திசையும் போற்ற வல்ல எம்பெருமாள் சொல்கேட்டு
சத்தியவானப்போ தரித்தங்கே மந்திரிக்க
தெண்டுடைய வீமன் திட்டென்றெழுந்திருந்து
கண்டு நதி மூழ்கிக் கரையேறித்தானம் பண்ணி
அரிகண்டங் கொண்டுவந்து அங்கமெல்லாம் தான் பூண்டு
பத்தியுடன் சங்கரனார் பாதந் தொளுகவென்று
கத்திரிக் கோலம் பிடித்து கனவிபூதி மேல்பூசி
அஞ்சுசடை பின்னி அரிப்புலித் தோலுடுத்தி
பஞ்சவர்ணறுத்திராட்சம் பருத்தவடம் பூண்டு
வந்து மதவீமன் மாயனையடி வணங்கி

37. முந்தி வரமிருந்து முக்கண்ணனார் தன்கையிலே
இந்த நல்ல பாசுபதம் போறதே வாங்கிவர
என்னை யனுப்புமையா யெங்கள் பெருமாளே
அந்த மொழி கேட்டு அருளார் ஏதுசொல்வார்

வாராய் நீர் மதவீமா வலிய பல்முள்ளவனே
சீறார் சடையார் சிவனருகில் போய்வரவோ
போற்றித் தவமிருந்து பாசுபத வேணுமென்றாள்
நித்திரைகளாகாது நெடுபசுகளாகாது
பெண்ணாசையாகாது பொன்னாசையாகாது
மண்ணாசையாகாது வாள வரசையாகாது
கடும் பசிகளாகாது கண்ணுறக்கமாகாது

38. இடும்புகள் விட்டு இருக்க நீ வல்லாயோ
இந்தனையும் விட்டு யிருந்தாயே யானாலும்
கருருத்தனாருங்களுக்குக் காட்டிச கொடாதிருந்தால்
யீசனார் தன்னை யிப்போ யென்செய்ய வல்லாய் நீ
என்று சொன்ன மாயவற்கு ஏது சொன்னான் போர்வீமன்
யென்றுமுலகளந்த யேகவண்ணா கேளுமையா
சங்கரனார் வந்து சரங்கள் கொடாதிருந்தால்
அங்கமெல்லாம் மங்கத் தரிச்சு அரன்பக்கல் விட்டெறிவேன்
வன்னமுள்ளத் திரிக் கோல் வகையுடனே தானெடுத்து
சின்னபின்னமாகத் திரேகமெல்லாம் கத்திரிச்சு
அன்னையிலே விட்டெறிவேன் அரனுன்டகலுக்கு
பத்தியிளுத்துப் ப.....ச்சைகளுள்தெல்லாம்

39. கத்திரிச்சு விட்டெறிவேன் கயிலைமலைதனிலே
என்றுதான் மதவீமன் எடுத்து வைத்த சொற்கேட்டு
குன்றெடுத்த மாயவனுங குலுங்க நகை நகைத்து
வாறாய் மதவீமா வலவிடும் போர் செய்வது நீ
காறாய் கருஞ்சதையைக் கத்திரிப் பேனென்றாயே
அந்த வகைக்கு அரனுந் தோணாதிருந்தால்
யெந்த வகையால் நீ யீசுபரரைக் காண்பதென்றாள்
யென்று சொன்ன மாயவற்கு ஏதுசொன்னான் பேறுவீமன்
கொன்றை முடியார் கொற்றவரை நான்போற்றி

வானச் சடையார் வரங்கள் கொடாதிருந்தால்
பொன்னின் கயிலங்கிரி போதவே தானெடுத்து
அன்னேரம் அண்ணர் பக்கல் வைப்பனாமென்று சொல்லி

40. இந்த வசனங்கேட்டேக வண்ணரேது சொல்வார்
கத்தமெனுங் கிரியைக் கையாகவடுப்பனென்று
வலிய பிலத்தாலு வல்லிடும்பு தன்னாலும்
மலையெடுக்க வந்ததொரு வா ளரக்கன் பட்டதுதான்
கொல்லி மலையெடுத்த கொடுமபாவி ராவணன்தான்
வாலிகையில் சிக்கியவன் வாலில் கட்டுண்டதும்
ஒரு கோடி காலம் விளுதாகலாலாவே
தருமப்புகளால் வந்த தாறகை யாளப் போது
தன்கணவன் றன்னைத் தயவுடனே தானணைத்து
அவன் பெண்ணெடுக்கவென்று வால்மயிரைக் கோர்வையிலே
கண்டாளே தாறகையாள் கடும்பாவி ராவணனை

41. வண்டாடும் பூங்குழலாள் வாலிதனைப் பார்த்து
இந்தப் புதுமையிது யேதென்று கேட்கையிலே
வந்த வனத்தில் வளிவசமாய்ச் சிக்கினது
பத்துத் தலைப் பூச்சி நம்மபவகனார் அங்கதற்கு
வைத்து விளையாடவென்று வலுவுடனே கட்டிவைத்தேன்
வைத்து மரியேனமந்து விட்டேன் பெண்கொடியே
சட்டமுடன் தம்பி தவழ்ந்து விளையாடவென்று
தொட்டிலிலே கட்டித் தூக்கி வைப்பார் பூச்சிதனை
அல்ல வல்ல மன்னா அறியாமல் சொல்லுகிறாய்
வல்ல யிலங்கையிலே வாழரக்கன் ராவணன்தான்

42. துலங்கு மிலங்கையில் வாழ் தொறுத சேவுகன் காண்
நம்முடைய ராவணனை நன்றாகப் பூச்சியென்றீர்
கட்டியிங்கே வைப்பர்களோ கனத்த முடிவல்லோன்
விட்டுவிடா யென் கணவா வீரமுடி ராட்சதனை

மாட்டார் குழலுடையாள் மங்கை நல்லாள் சொற்கேட்டு
விட்டானே ராவணணை வீரமுள்ள வாலியுந்தான்
விட்டது போது மென்று மிண்டுவந்தான் ராவணனும்
அந்தக் கதையைக் அறியாயோ வீமா நீ
இந்த மலையை யெடுக்கவென்று நினைந்தாய் நீ
வாளவிய கைய்யால் மலையைப் பிடுங்கியல்லோ

43. தோள்தனிலே கொண்டு வாரேனென்றதொரு சேவுகனே
இந்த வனத்தில் இருப்பார்கள் ராட்சதர்கள்
வந்து பிடித்துன்னை வனத்திலே கட்டிவைத்தால்
அந்தக் கட்டுதன்னை அவிழ்க்க நெடுநாளாமோ
எந்த வகையால் நீங்கள் அரசாள்வீர்கள்
கொந்தாரு ம்பூங் குழலர்கோதி மயிரெடுத்து
பந்தயங்கள் தான் முடித்துப்பத்தினி கெலிப்பதென்று
இந்த வசனமுனக் கீடேற மாட்டாது
அந்தமுள்ள வீமா அமந்திறென்றுளாவருமாய்
அவ்வார்த்தை கேட்டு அமர்ந்திருந்தான் போர்வீமன் என்றும் மகிழ்ச்சி

44. அப்போதருச்சுனரும் ஆரை விடப்போறோமென்று
செப்பமுள்ள தீர்த்தந் சீருகவே முளுகி
மூழ்கிக் கரையேறி முகுந்தனே போற்றியென்று
எழுதறியா மேனியனும் யென்ன வடிவெடுத்தான்
எழுத ஒன்...உருவம்
செஞ்சடையார் சங்கரனை சீராகப் போற்றி செய்து
அஞ்சு சடை பின்னியரியதொரு நீறணிந்து
உடையாளலருடைய நாயகனா ரற்ச்சுனரும்
சடையார் வளகாய்த் தரித்தாளிளம் புரையை
சந்திரனுஞ் சூரியனும் சடைமேல் தரித்தளகாய்
ஆதியூலகளந்த அருளாளன் அருச்சுனனும்
காதில்த் திருமேனிக் கடுக்கனதுதான் பூண்டு

வாளாவலிய ஐயன் வடிவளகன் அருச்சுனனும்
தோள் தனிலே சாரைப்புலிதோலெடுத்து போற்றிஎன்
தூவி மலர்தன்னைச் சூரியனைப் போற்றி செய்து
காவியுடுத்திக் கமண்டலமுங் கைப்பிடித்து
கருத்தில் சிவன் பூத்ததைக் காணவே வேணுமென்று

45. தருத்தன்காய் ருத்திருட்சத் தாவடமுந்தான்பூண்டு
நய்யாண்டிக் கின்னரியும் நன்றாகத் தானெடுத்து
துய்ய மணிமார்பில் தூக்கினார் அர்ச்சுனனும்
பிரை சூடும் ஈசருட பொற்பாதம் போற்றி செய்து
அரையிலே புள்ளிமானாசனமுந் தாமுடுத்தி
ஓங்கி விகிஞ்சு கட்டி ஒட்டியாணந் தான் பூண்டு
ஆதிகயிலை மலைக்கருந்தவசு போகவென்று
பாத குரடுந் தொட்டுப் பறுங் கச்சைதானுங்கட்டி
அப்ப ஒருகோடி அவகம்புதாதானிருக்கும்
அம்பிறாத் தூணி அணி முதுகிலே சாத்தி
சிவமுனிவனாமென்று வேசீறுள்ள அருச்சுனனும்
நவமணிவில் லெடுத்தென்னை நன்றாகத் தானெடுத்து
வளதடியுஞ் சக்கரமும் வகை வகையாய்த் தானெடுத்து
பழைய முனிவேசங் கொண்டு வந்தானே பார்த்திபனும்
கஞ்சாக் குடுக்கைகளும் கயிலத் திருநூற்றுண்டைகளும்
அஞ்செழுத்துப் பாவினையும் அரனைப் போல வடிவுகொண்டு
சாரைப் புலித் தோலுடனே சன்னாசி பார்த்திபனும்
பாரளந்தபாத்திபனைப் பணிந்துகொண்டு பார்த்திபனும்

46. கண்டு பெருமாளுங் கனக்கமன மகிழ்ந்து
புண்டரிகத் தோளனசய புன்சிரிப்புக் கொள்ளலுற்றார்
குறுஞ் சிரிப்பு கொண்டு குலுங்கநகை நகைத்து
அந்தமுடன் பாத்தன் அணிந்திருந்து கோலங் கொண்டு
இந்தத் தவசு ஈடேறும் அர்ச்சுனனும்

என்மனதுக் கேற்றபடி இசைந்தனுப்ப வல்லோ நான்
தருமருட வாக்கு வரந்தார் வேந்தர் வேண்டாமோ
எங்கள் மனத்திலிருந்த படியாமோ
உங்களண்ணர் கையில் உளப்படுத்திக் கொள்ளுமென்றார்
அவ்வார்த்தைக் கேட்டு அர்ச்சுனனும் வந்தவவோ
சேர்வையாய்த் தன் மருடசீர் பாதம் போற்றியென்று
காயாம்பூ மேனியனே கட்டழகா கேளுமென்று

47. ஆசையுடனனுப்பினார் பக்கலுக்கு
நேசமுடன் போயலவோ நீண்ட திருப்பாதம்
வாசமலரெடுத்து வணங்கியே சிற்றடியேன்
பாசுபதம் பெற்று பார்வேந்தர் நான் வாரேன்
நன்றாற் பதிக்கரசே நாயமே அண்ணாவே
பொன்னான் வாய்திறந்து போகவிடை தாருமென்று
மாணிக்கம் பூண்டிருக்கும் மார்புடைய அண்ணாவே
ஆணிப் பொன் வாய்திறந்து அனுப்பிவிடை தாருமையா
அப்போது தன்மர் அனுப்புமென்று சொலக் கேட்டு
கீர்த்தி புகழ் படைத் தகிஷ்ட்டணரே கேளுமையா
பாத்திப் பனைவிட்டுப் பிரியேன் காண் பார்தனிலே
மட்டாருலகளந்த மாயவனார் அச்சுதரே

48. விட்டுப் பிரியேன் காணவேண்டாமருந்தவரே
நாடுங் கருகளும் நல்மணியந்தான் வேண்டாம்
ஆசையுடனாளுமரசுபதி வேண்டாம்
பாசுபதம் வேண்டான் காண் பாரளந்த மாயவரே
ஆண்டவனே தம்பியை ட்டரைநாளிகை பிரியேன்
வேண்டாமென்று சொல்லுமையா வீரனருச்சுனனை
யென்று தன்மறாயன் யெடுத்துரைத்த சொல்க் கேட்டு
மண்ணளந்த மாயவரும் மறுவார்த்தையேது சொல்வார்
உன்தம்பி அர்ச்சுனற்கு உரைத்தக் காலிப்போது
எவ்வார்த்தை கேட்டு இருப்பாறோ வாள்விசையன்

காண்டீவி அருச்சுனரைக் கைம்மத்தி நில்லென்றே
வேண்டாமென்று சொல்லும் விசையனுடன் தம்பியற்கு

49. வாய்திறந்து தம்பியற்கு வகையல்லவென்று சொல்லி
நீர்தானோ சொல்லி நிறுத்தமந்தச் சொல் கேட்டு
அப்போது தன்மர் - அருச்சுனனைத் தான்பார்த்து
தப்பாத சொல்லுடையத் தம்பி தனஞ் செயனே
சீரான கனகதேசங் கனிகள் தின்றிருப்போம்
பாறாசை கொண்டாங்காண் பாசுபதம் வேண்டாம்
சீறான கானகத்தே செங்கனிகள் தின்றிருப்போம்
இதுவோ சுகமெனக்கு யெம்பெருமாள் சொற்படிக்கு
அதுவோ சுகமாக ஆண்டிருப்போம் கானகத்தே

## வெண்பா

பூக்கொண்டு உம்பர் புகரக்கண்டு போற்றிசெய்து
பார்கொண்டு நாளும் பரிவாகத் - தேக்கு
மதத்தானை தன்னை மலர்க்கமலம் போலும்
மயத்தானை நெஞ்சம் பணி -
நெஞ்சமே நித்தம் நினையாத பாண்டவர்க்குத்
தஞ்சமேயாயிருந்த தாடாள்ரிஞ்சவே
கல்லையுருவேற்றிக் கமலர் பதம் போற்றி
தொல்லையுருவேற்றித் தோது
நாத முதலென்பது நான்கு நூற்றாயிரமும்
பேத முடனாறுப் பெண்ணுருவாய் - ஓதுஞ்
சறாசரமா யெவ்வுயிர்க்குந் தானாகி நின்ற
பறாபரையே யென்னுடைய பத்து.

## விருத்தம்

திருமகள் கணவனோடுஞ் செழுமலரயனுங் காண்
பெருமலைவில்வில்லை பெண்ணொரு பாகத்தண்ணி

அருமறைக் கணங்கள் நான்கும் அர்ச்சுனன் தபசுபண்ணி
வருமள வேடஞ் செய்ய மலரடி மனதுள் வைப்பாம்.க.

நடை

வேண்டா மருச்சுனனே விட்டுவிடாயிவ் வார்த்தை
யென்று தன்மறாயன் யெடுத்துரைத்த சொல் கேட்டு
பண்ணுந் தவமுனியும் பாத்திபனுமேது சொல்வான்

1. வல்லதொரு தர்மரே வரிசையுள்ள அண்ணணாவே
நில்லென்று சொல்லி நிறுத்தாதே அண்ணாவே
சித்த மிக மகிழ்ந்து திருவார்க்குத் தான் கொடுத்து
பத்தியுடனனுப்பும் பாறாளுந்தன் மருமேநீ
சங்கரனார் கைதனிலே சரம்பெற்று மீண்டுமங்கே
தங்கென தரியேன் தாவறியேனங்கொரு நாள்
கட்டுடனே றாச்சியங்கள் காவில்களுந்தான் கடந்து
மட்டுடனே நீர் நிறுத்தி வேண்டாங் காண் மன்னவனே
வருத்தமுடன் பாசுபதம் வாங்க மிகப் போறவனை
நிறுத்தினால் நில்லேன் காண் நீதியுள்ள அங்ணாவே
அன்னேரந்தன்ன அருளாரைத் தான்பார்த்து
பொன்னின் கீரிடமுள்ள பொன்வேந்தனருச்சுனன்தான்
என்று மொரு நாள் எதிர் வார்த்தை சொல்லவந்தான்
இன்று யெனக்கு எதிர்வார்த்தை சொல்லவந்தாய்
புனிதர் திருவடியைப் போற்றி மனதிறாலண்ணி
தணுவரங்க வேணுமென்று தன்மனதிலெண்ணியவன்
இனி நில்லான் தம்பியவன் யென்று மனதிலெண்ணி

2 ஆறாருஞ் சூளும் அயோத்தி அரசாண்டான்
நாராயணரே நீர் நன்றாகக் கேளுமையா
மங்கை பங்காளரைக் கையில் மகிர்ந்துவரம் வாங்கி
இங்கே நான் போரமென்றால் இனிவேண்டாமென்றீரே
வீமனுந்தான் போறோமென்று வேசமெடுத்தவனே

தாமிசம் பண்ணித் தடுத்தீர் பெருமாளே
நீண்ட உலகளந்த நெடுமாலை யேக வண்ணானா
காண்டீபி யீசர் பதங்காண யிவன் வல்லவனோ
பொங்கமுடன் சங்கரனைப் போற்றி செய்ய வல்லவனோ
எங்களைப் பார்க்க இவன் திறமோ ஆண்டவனே
அர்ச்சுனைற்குப் பாசுபதம் அவர்த்திருவாரென்று சொல்ல
மெச்சி மனம் மகிழ்ந்தீர் மேகவண்ணா கேளுமையா
கோலவண்ணர் கன்னியர் மேல் கொற்றவனுமாசை கொள்வான்
பாத்திப் பதிறாதே பாறைதனிலோடுகிற
ஆத்து மணலை அளவிட்டுப் பார்த்தாலும்
பாத்தனுட பெண்டுகள் பாரிலக்கணக்கில்லை அய்யா

3. அண்டாத யோசனையில் ஆகாத நட்செத்திரம்
கணக்கிடலாமிவனுடைய காரிளையார் தங்களையும்
கணக்கிடவும் போகாது காண்டீபிபெண்டு கணை
அலைவந்தசைத் தாலும் அரன்பூசை பண்ணுவாறோ
பல போகம் பார்த்தவர்க்குப் பாசுபதம் வருமோ
கண்ணாடிப் பல்லொளியைக் கன்னியற்குத் தான் காட்டி
பெண்ணாசை கொள்ளவல்ல பேரழகன் அற்சுனற்கு
உண்ணாமலைப் பாசுர உகந்து வந்து தோணுவறோ
நல்லது வார்பதி நாடாளு நாராணரே
நில்லென்று சொல்லி நிறுமை யாயருச்சுனரே
அந்தமொழி கேட்டு அருளாளரேது சொல்வார்
வருங்கருமஞ் சொல்லென்று வாய்திறந்து கேட்டாக்கால்
தருமமுடன் சொன்னான் காண் தர்மாவே உங்களுக்கு
வல்லவனாம் அர்ச்சுனனைவாய்திறந்து நாமுமிப்போ
நில்வென்று சொல்வதற்கு நீதங்களுண்டோதா
நான் சொன்னால் நிற்பானோ நலமான வில்விசையுடன்
தர்மரே நீர் சொல்லித் தடுத்து விடுந் தம்பியரே
யென்று யிருவோரும் யேத்தவிதஞ் சொலக் கேட்டு

தரணியளந்தாருடனே திருமருட சொல் கேட்டு
முரணவி கேட்டு முகம்வாழ அர்ச்சுனனும்
அறியாதார் செய்ததொரு ஆகடிய வாற்த்தனை
பெரிய பெருமாளுடனே பேசுவரோ அண்ணரென்று
சரியான மைத்துனனாம் செகமளந்த கிஷ்ட்டணனுடன்

4. பெரிய விசேசமிது பேசினாரென்று சொல்லி
வணங்கித் துதியாமல் மறுவார்த்தை பேசாமல்
பிணங்கிப் பிற்பட்டு போகலுற்றார் அருச்சுனரும்
சீறான காட்டகத்தே சிலையதனைத் தோளில் வைத்து
சூரவனங் கடந்து சோகவனங்கடந்து
காரைவனம் புகுந்து காண்டீபி அர்ச்சுனனும்
தலவடிவு கொண்டு தனஞ்சியனுமன்னேரம்
சிவனே சிவனே யென்று சிந்தித்துத் தான்நடக்க
அந்த வனத்தில் அரியர புத்திரனும்
கந்த மலர் முகத்தான் கால வயிரவனும்

5. விந்தையுடன் வாழ்க வீற்றிருந்தார் வனத்தே
சந்தியானம் பண்ணவென்று சதிருடைய மன்னவர்கள்
சந்திர சூரியர்கள் காணாத காட்டகத்தே
கட்டளகன் பேரளகு கதிரோ னொளிபோத்த
வெட்டாற் வெளிபோலே விண்மின்னொளி போலே
பாண்டு மைந்தன் பேரழகு பளிச் சென்றொளி போலே

6. கண்டு யெழுந்திருந்து காலவயிரவனும்
பண்டொரு நாளிப் புதுமை பாத்தறியோமின்னேரம்
விரிவான காட்டகங்கள் வெளிப் பரவியிருக்குதென்று
அரியர புத்திரனென்று அடியெடுத்து நீ பாத்து
திரும்பியே வாருமென்று தீவிரமாய்த் தானனுப்பி
அன்னேர மெளுந்திருந்து அரியர புத்திரனும்
சொன்னபடியே தான் சோதித்தடி தேடி

7. தருகாவனத்தில் அடி தானெங்கு காணாமல்
காரை வனந்தனிலே கண்டாள் தவமுனியை
எண்ணுயிரஞ் சோதியேதிரெளுந்து வந்தாப்போல
கண்ணாலருச்சுனனைக் கண்டவனும் ஓடிவந்து
வா்றாய் வயிரவனே வகையாகச் சொல்லுகிறேன்
ஆராய்ந்து நான் பார்த்தே அடவி வனங்களெல்லாம்

8. ஆரோ தெரியாது அவனொருவன் தன்னாசி
மெத்த வடிவழகிண மேனியெல்லாந் தங்கநிறம்
உந்தித் திருவழகை உகந்து சொல்லப் போது
சங்கரனோ நாரணனோ சதுர்முகனொருத்திரனோ
யெங்கிருந்து வந்தானோ இந்துரனொருத்தினோ
வண்டுலவுங் காரை வனத்திலிருக்குறார்

9. கண்டு சொல்லப் போகாது காண்டீபன் வில்பிடித்து
வந்தவனாரங்கே வாழ்வீரென்ன ஆறுசொல்லி
இந்த வகை கேட்டு யெளுந்திருந்தான் வயிரவனும்
அந்தமுள்ள வீரன் அரியர புத்திரனும்
வந்தந்தக் காரை வனம் புகுந்து கண்டார்கள்
கண்டந்த மாமுனியைக் கண்ணாரத் தான் பார்த்து

10. பண்டு முனியோர் நாள் பாருலகில் கண்டறியேன்
எந்த புலகிருந்த இவிடம் வந்தாய் முன்னாசி
உந்தனுட வாய்திறந்து உண்மை சொல்லவேணுமையா
சொன்ன மொழியைச் செவிகுளிரத் தான் கேட்டு
அன்று தவமுனியும் அருச்சுனனும் அன்னேரம்
வாழ்ந்து ரவாமல் மறுவார்த்தை பேசாமல்

11. தாயே உமையவளே சங்கரியே போற்றியென்று
மாயே சுரனே மகாதேவர் போற்றியென்று
...ஏனென்று கேளாமல் ஏற்றமுகம் பாராமல்
ஆரென்று கேளாமல் அடவிகளுஞ் சொல்லாமல்

பாரேனொருவரையும் பரமனே போற்றியென்று
அரியதவமுனியும் அருச்சுனனுமப்போது

12. பெருவிரலைப் பார்த்தவனும் பேசாதிருக்கையிலே
அப்ப வயிரனும் அதட்டியெளுந்திருந்து
செப்பமுடனான் அழைத்தாலச் சிவனை நினைத்தாயே
யென்னோடே பேசாமல் எதிர் வார்த்தை சொல்லாமல்
உன்னுமமுன்பதியும் உற்றுநீ சொல்லாமல்
செங்கையிலே மானேந்துஞ் சிவனே சிவனேயென்று
எங்களிலே நீ மிகுந்த ஏத்தவனோ மீசுரற்கு

13. சிவனென்ற வாசகமும் சீர்சடையும் முன்னழகும்
தன்வடிவுகொண்டு மல்லவோதா ள்ந்திறுந்தேறின்னேரம்
எனவெனத்தில் வந்தவர்கள் என்னோடு யித்தம்பண்ணி
பின் கெவித்து மீண்டு பிழைத்தவர்கள் உண்டோதான்
அல்லக் காண் சன்னாசி அது கேளுமென்னுடைய
வில்லடிபட்டவர்கள் வெகுகோடி பேர்களுண்டு

14. ஊரேது பேரேது பேரேது உற்ற பதிதானேது
காலவயிரவனுங் கட்டுரைந்த சொல்கேட்டு
நீலவான் அர்ச்சுனன் தான் நின்று விசாரமிட்டு
வதனமலர் சோலையிலே வாளுகின்றறாடச தன்முன்
அண்ணர் சொலக் கேளாமல் அவதிவந்து நேந்துதையா
யென்னசெய்வோமென்றுயிருந்தாள் தவ முனிவன்

15. மின்னு முனிவன் பேசாதிருக்கையிலே
தன்னுடைய வில்நாரி தரித்தான் வயிரவனும்
வில்த் தொணியெடுத்து வில்நாரி யொத்திடவே
கல்லும் மலையும் கடலும் கலங்கிடுமாம்
பூமி அதிர்ந்திடுமாம் பொன்னரவம் தான் தோளுமாம்
சுவாமி யிருக்குமலை சுழளன்று மேதானதிர

16. யீரேறு லோக மெங்கும் நடுங்கிடவே
பார்விசையன் பகருவான் னெறம் (நேரம்)
யிந்தப் பிலவாணை யேங்குனான் கண்டதில்லை
விந்தை துரோணர் வில்லும் விதுரனான் வில்லுவிட்டுணுவில்லும்
அந்தமுள்ள அசுவத்தாமன் அரியபெரிய வில்லும்
எந்தனுட வில்லானால் நடுங்காதோ யிவ்வுலகில்

17. யித்தனை வில்லில் யிதுபெரிய வில்லெனவே
மெத்த மனமகிழ்ந்து வில்விசையனேது சொல்வான்
ஆசாரமாக அவனுடனே வாய் திறந்து
பேசாதிருந்தாலப் பிழை செய்வான் மாவியென்று
யென்காணும் ருட்சதனோ என்னுடனே சொலக் கேட்டு
கன்று வயிரவனும் கலகலென்று தான் சிரித்து
ஆசாரமாக அருச்சுனனைப் போற்றியென்று
பேசாமல் தானிருந்தான் பெரிய தவமுனிவன்
வில்வளைக்கப் பேசினன் கரணமே தளந்து சின்னாசி
விடுவிடு தவமுனியே வில்லேது அம்பேது
சிறாகச் சொல்லுமென் சேதியது கேட்டிடவே
ஆசை பழகியனாம் அருச்சுனனும் ஏது சொல்வான்

18. கேளாய் நீறாட்சதனே கீர்த்தியுடன் சொல்லுகிறேன்
ஆங்கலங்காரமுள்ள அத்திபுர நாடன்
சிங்காரச் செங்கோல் செலுத்தி அரசாளும்
தங்க மார்பன் சந்திரகுல சேகரன்றன்
தேவேந்திரன் கெபாலத் தேசமது ஆளவல்லீர்
பாண்டு மகாராசன் பெற்ற பாண்டவர்கள் வரிலும்

19. காண்டாவனமெரித்த காணட்டபி யென்பெறும்
இந்திர புரியில் இருந்த ரசாளும் மன்னன்
குந்தியம்மன் பெற்ற கொற்றவர்களை வரிலே
அந்த முள்ள வீரன் அருச்சுனன் காணேமன் பெறு

தந்தையர் சொல்லல்லாமல் தனுவெடுக்க மாட்டேன் காண்
விமலர் சொல்லல்லாமல் வில்லெடுக்க மாட்டேன் காண்
மூத்தோர் சொல்லல்லாமல் மூரிவில்லெடுக்கேன் நான்

20. என்னுடைய வில்லாலே யீடளிந்து போனவர்கள்
மன்னரனேகமுண்டு வந்தெரித்து மாண்டவர்கள்
காமன் வில்லென்றால் கலங்குமுடி மன்னரெல்லாம்
பாண்டு மன்னரென்றால் படை மன்னரஞ் சுவார்கள்
யேன் காண் ராட்சதனே வீண் வார்த்தை பேசாதே
பாலைவனத்திருந்து பாசுபதம் வேணுமென்று

21. காலவயிறனைக் காண வந்தேன் றாட்சதனை
யென்று சொல்லக் கேட்டு யிருந்தவயிரவனும்
நன்று நன்றென்று நாரிவில்லைக் கீழ்விட்டு
கடுகியே வந்தவனும் கட்டித் தழுவியங்கே
முடுகியே வந்து முகத்தில் முகம் வைத்தலவோ
அரியவுத்திரனும் அந்த வயிரவனும்
யிருவருமங்கே எதிர்த்துப் படைபொருத

22. ஒரு விடுசேதங்கள் ஆகாயிருந்தோமே
கால வயிரவனைக் கண்டாரோ தம்பியரே
வல்லாய் மாகவங்கே வந்தவகை சொல்லுமென்றார்
தேவேந்திரன் மகனார் சீருள்ள அருச்சுனனும்
தான் வந்தவாறு தனைத்தப்பாமல் சொல்லுமென்றார்
மன்னன ழகுடைய மாறன் சீறானபாகி
என்ன மத்த ராச்சியங்கள் ஆண்டுமிருக்கையிலே
பன்னாகமும் வாழும் பரவிதிரி யோ தின்னதான்
ஆனால் பெரியதொரு அத்திபுரியாளும்
மறாகல மேனியன் வணங்காமுடிமன்னன்
வட்டக் குடையுடைய மன்னதிரி யோதனன்தான்

23. எட்டுத் தோலக்கன்றக் குயிசைந்த கலியாணமென்று
வருந்தியே யெங்களையும் வரவழைத்துச் சூதாடி
நாடுந் திரவியமும் நற்பூமி உள்ளதெல்லாம்
தேடுந் திரவியமும் தென்னன் பண்டாரமுடன்
ஆனை குதிரை அரசுடனே தேருகளும்
சேனையுடன் காலாளும் திரளான மாட்டுடனே
அத்தனையும் தோர்ந்து அரசுபதி தோர்ந்து
பன்னிரண்டு வருஷம் பார்வனவாசம்
இனிய பெரியோரிசைந்தனுப்ப வந்தலவோ
கனியுரையும் பாலைகா தேனில் வந்தோங் காண்
நாரணர் சொற்பழக்கினான் தவசு போகவென்று

24. வனஞ்சூழ்ந்த கானகத்தே வந்தேனுனைத்தேடி
உம்முடைய கையில் உபைய வரம் வாங்கி
செம்மையுடன் சங்கரனார் சீர்பாதங் காணவென்று
வந்தவகை கயிறுதான் வையிரவன்தான் கேட்டு
அந்தவகைக் கொளலாம் அடவுடனே தான் கேட்டு
சந்தோசந் தானாகி சாலப்பிரியமுடன்
சந்திரனைப் போற்றிவந்த தம்பி தனஞ்செயனே
எங்களுட மாளிகையில் யினி வாருமென்றழைத்து
வந்தந்த மூவருந்தான் வரிசையுள்ள மாளிகையில்

25. வாசினைகளுள்ளதொரு வான்ரற்றினக்கம்பளியை
ஆசனங் களிட்டு அமர்ந்தார்களன்னேரம்
அப்போது வயிரவனும் அர்ச்சுனனைத் தான்பார்த்து
தப்பாத வில்லுடைய தம்பி தனஞ் செயனே
யெப்படிநீ பேரிவாய் யீசுரனார் பக்கலுக்கு

26. இப்படிப் போனவர்கள் இருகோடி பேர்களுண்டு
ஆண்டு மொரு கோடி ஆகிறது காண் மன்னவனே

மீண்டுள்ளவர்கள் வரக் காணேனே வில்விசையா
அவசரமாய்ப் போன அத்துள முனிவரத்தனையும்
தவசுபெற்று மீண்டு வரக் காணேன் வில்விசையா
அங்கரனைப் போற்றி செய்து அம்புவரம் வாங்கவென்று

27. சங்கரனார் பொன்மலைதான் சுற்றிடமோ அர்ச்சுனனே
சரணத்தன் மல்ல சககோடி யோக ஏணை
என்று வயிரவனும் எடுத்துரைத்த சொல்கேட்டு
அன்று தவம் வந்த அர்ச்சுனனும் என் சொலுவான்
உந்தன் கிருபை உபதேசந்தந்தெனக்கு
எந்த வகையாலும் இசரபதம் காண்பதற்கு
பத்தியுடன் யீசர் கையில் பாசுபதம் வாங்கி

28. சித்தமகிழ்ந்தெனக்குத் திருவாக்குத் தான்கொடுத்து
காவயிரவனைக் கைதொழுது கேட்டிடவே
சீலமுடன் வாருஞ் சிந்தை மகிழ்ந்தேது சொல்வார்
மாலைக் கருங் குயிலாள் மங்கை நல்லாள் பார்வதியை
சோலைக் குயிலாளைத் தோத்திரங்கள் பண்ணலுந்தான்

29. தாமன் மணிமார்பன் தாயாருமையவளே
பூமாலை கொண்டலவோ போற்றி செய்து நின்றானே
சத்தியுமை பார்பதியே சரசுபதியே போற்றியென்று
பத்தியுமையவளே பார்வதியே போற்றியென்று
நிரைத பஞ்சாட்சரியே நீலிவிகபாலியம்மாள்
வந்தருளும் சங்கரியே வாகீஷ்பரியாளே
ஆதியுமையாளே அப்போது வயிரவனும்
நீதி யுடையவனே நிறைந்தளவில் பார்வதியும்
ஆதியரன் பக்கல் அமர்ந்த பராபரியே

30. சோதி வயிரவன் முன் தோன்றினாளப்போது
கண்ணாரக் கண்டவனேக காடித்தரவேணுமென்று

நன்றாகத் தெண்டனிட்டு நின்றான் வயிரவனும்
அப்போதுமையவளும் அன்பாய் மனமகிழ்ந்து
தப்பாமல் வரங் கொடுக்கும் சங்கரியு மென்று சொலுவாள்
மெச்சினேன் தம்பியரே வேண்டும் வரம்அருள்வாய்
யிச்சையுடைய தெது வேணுங் கேளுமென்றான்

31. நாட்டமுடனே நன்றாகப் பூசை செய்தான்
கேட்டவரங் குடுப்பேன் கௌரவயிரவனே
அம்மையேதானையன் அடியேன் நினைந்தபடிச்
செம்மையுடன் கொடுக்குந் திறமுடைய மாதாவே
பாண்டவரும் நூற்றுவரும் பந்தயங்கள் சூதாடி
ஆண்டிருந்த ராச்சியமும் அரசுபதி தோத்து
ஆருமற்ற பேர் போலே அய்வருங் காடுரைந்து
பார்வனவாசம் பண்ணுவது நீதியோதான்
நீங்களிருக்க வேறநிலை குலைய நீதியோதான்
ஓங்கு விசையனுக்கு உபதேசம் வேணுமம்மா

32. வம்பு செய்த நூற்றுவரை மண்ணில் மடிப்பதற்கு
மந்திரத்தாற் பாசுபதம் வாங்க உபதேசம்
இந்த வகை அற்ச்சுனற்கு ஈய்ந்தருள வேணுமம்மா
அன்ன நடையே நீ அருந்தவசுபெற்ற தொரு
பொன்னி நெடுங் கம்பமது போதவே தாருமம்மா
அந்த நல்ல கம்பம் அருச்சுனன் தபசு பண்ணி
இந்த வகையெல்லாம் யினிக் கொடுக்க வேணுமம்மா

33. கன்னியுமையவளே காண்டீபி அர்ச்சுனற்கு
பொன்னி நெடுங் கம்பம் பொருந்து முபதேசம்
அன்னவற்குச் சொல்லி அரனாள் பார்வதியும்
முப்படியுள்ள முழுவயிரக் கம்பமது
அப்போதழைப்பிவைச்சு அர்ச்சுனற்குத்தான் கொடுத்தாள்

மந்திரங்களுள்ளதுவும் மாயத்திருநீறும்
தந்திரங்களுள்ளதுவும் தவசுபெரு வண்மைகளும்
இந்திரபுரத்து யினிய வரங் கொடுத்து

34. அந்தக் கயிலைதனில் அமர்ந்திருந்தாளன்னேரம்
அப்போது வயிரவனும் அம்மையும் போனபின்பு
செப்பரிது காளிதனைச் சீராகத் தானழைத்தான்
புட்பவகை யதனால் போற்றி செய்தான் காளிதனை
நீல வண்ணன்றன்னுடனே நின்றாடும் பார்வதியே
சூலமொருகையிலுஞ் சுடர்மழுவுந் தானேந்தி
கச்சணிந்த கொங்கை நல்லாள் காளியம்மே வாருமென்று
பொருத்தி வயிரவனும் போற்றிசெய்தான் மன்னவனும்
வருந்தியே காளி வயிரவன் முன் தோன்றிடவே
கண்டு வயிரவனுங் கண்குளிர்ந்து தெண்டனிட்டு
புண்டரிகப் பாதமென்று போற்றி செய்த நின்றானே

35. கைகட்டி வாய்மூடி காளிதனைத் தெண்டனிட்டு
மெய்மகிழ்ந்து வாழ்த்தி விடை கொடுத்தாள் காளியம்மாள்
பின்னே வயிரவனும் பேசுகிறான் காளியுடன்
தாயே யுண்பிள்ளையல்லோ தன்மருந் தம்பியரும்
காயம் வனந்தனிலே கருகியவரதிரிரிந்து

36. தாயிருக்கப் பிள்ளை தளருவது நீதியல்ல
யீசருட பக்கலிலே யின்பமுடன் அருச்சுனனும்
பாசுபதம் வாங்கப் போறான் காண் அருச்சுனனும்
நீ தவசுபெற்ற தொரு நீண்டவெள்ளிக் கும்பமது
மாதாவே யெந்தனுக்கு வரந்தர வேணுமென்று
யிதுவோ சிலபாரம் யென்று சொல்லிக் காளியனார்
பூத கணங்களையும் போத போத வரவழைத்து
நீதியுடன் நொடியில் நீண்ட கம்பந் தானெடுத்து
சீக்கிரமாகச் சிணப் பொழுதில் நீ வருவீர்

37. உக்கிரமாகாளி உகந்து விடைகொடுத்து
பொங்கமுடன் பூதங்கள் போயெடுத்து வந்தலவே
அங்கே கைகொண்டுவந்து அந்தரிமுன் வைத்தார்கள்
வந்துதே கம்பம் வயிரவனே யென்று சொல்லி
துய்ய மணிமார்பன் சொல்லுவான் வயிரவனும்
தைய நல்லாள் கொடுத்ததங்கப் பொன்கம்பமிதோ
மெய் மகிழ்ந்து கொடுத்த வெள்ளிக் கம்பந்தானூத
யென்னுடைய கம்பம் யிருக்குதிங்கே பாருமென்று
முப்பதடிக் கம்பம் மூனுதுணுக்காயிருக்கும்
யிப்போது மூணுமொன்றாய் இசைக்கவே வேணுமென்றாள்
உன்னுபதேசத்தில் ஒன்றாக மந்திரிச்சு

38. சொன்னபடி கேட்கும் வரை சொல்லியருளுமென்று
மன்னனருச்சுனனை வந்தழைத்து முன்விடவே
அன்னையரேயென்று அடிதொழுதுஅர்ச்சுனனும்
கண்ணல்க் கிளி மொழியே காளிகாதெலியரே
பின்னையொருவர் பின்துணையும் யில்லையம்மா
பரமசிவனாரும் பண்புடனே யெந்தனுக்கு
வரம்கொடுக்கும் பஞ்சாட்சரியே மந்திரமுந் தானுமம்மா
மாலுடைய தந்தை மகிழ்ந்துதான் அறனற்கு
மூல பிரணவத்தை முன்சொன்ன அர்ச்சுனற்கு
சேவியிலுபதேசம் சீர்சொன்ன அர்ச்சுனற்கு
புவியாளும் அர்ச்சுனற்குப் போதத் தெரிந்து கொண்டு
விலப்புருமுள்ளதொரு வீரமாகாளி தன்னை
பொற்கொடியைத் தெண்டனிட்டு நின்றாளே போர்விசையன்

39. ஆதிவயிரவனும் அர்ச்சுனனைத் தான்பார்த்து
சோதின தான் பாற்கவென்று சொன்னதொருமந்திரத்தை
மின்னி வளைந்ததுவே பிண்ணள வாய்க்கம்பமது
வளர்ந்த கம்பந் தன்னை வாள் விசையன் மந்திரிக்க

உள்ளந் தனிலடங்கு உத்தமற்கு நின்றது வர
சித்திர மாகாளி சொன்ன சோதினகள் வந்ததென்று
சந்தோசமாகித் தனஞ் செயனுந் தெண்டனிட்டு
வன்னமனதிலெண்ணி வயிரவனுமப்போது
தன்மற்கிளையவரே தனஞ்சேயர் தம்பியரே

40. வற்ன்ன முடி அர்ச்சுனரே வாழ்வாய் வளர்ந்திருப்பாய்
அன்னருட கைதனிலே அனுப்பிவச்சுக் காணலவோ
பண்ணுமுபதேசத்திலப் பாசுபதம் பெற்று வந்தால்
மன்னவர்கள் நூற்றுவரை முகுடமுடி தறுகி
மண்ணுலகை யாளுமென்று வாழ்த்தி விடைகொடுத்து
வாள் வலிய கையான் வயிரவனுமேது சொல்வான்
காளியரே கேளுமம்மா காண்டீபி அர்ச்சுனரே
விசையனைத் தன்மர் பக்கல் விட்டு வரவேணுமென்று
அரியர புத்திரனும் அம்மைநீ கூடவல்லோ
இருவரும் அர்ச்சுனனை இன்றலத்துப் போயல்லவோ
தருமரும் பக்கல் விட்டுத் தங்காமல் வாருமிங்கே

41. வருவீறோ யென்று சொல்லி வாழ்த்தி வயிரவனும்
கூட்டி யவர்களையுங் கூட அனுப்பிவிட்டு
காட்டில் நடந்து கடுகி வந்தார் மூவருந்தான்
அஞ்சுமலை கடந்து ஆரணியந் தான் கடந்து
பஞ்சவர்கள் தானிருக்கும் பார்வனம் புகுந்து
வாசமலருடைய வனத்திலே மூவருந்தான்

42. யோசனை தூரமெனக்கோர் கண் பார்த்தார்கள்
தாறார் தனஞ்செயனும் தர்மருமங்கேது சொல்வார்
பாரளந்த மாயவரே பரமனாருயணரே
வாறார் சிவனுடனே வகையாக மூவருந்தான்
மூவருடன் கூடி மூர்த்தியாய் வரார்கள்
ஆவது காரியங்கள் அம்புவரம் வாங்க கைக்கு

போற்றி செய்ய வேணுமென்று போதவெளிந்திரிக்க
பாத்துச் சகாதேவன் பதறுதே அண்ணாவே

43. மூர்த்திகளுமல்ல - வையாமுடி பெருத்த மன்னவரே
அந்த வகை சொல்லென அமர்ந்திருந்து கேளுமையா
வருந்தியிந்தவாறு வகை சொல்லென யிப்போது
இருந்து சிங்காசனத்தில் இன்பமுடன் கேளுமையா
தன்மருமப்போது தம்பிதனைப் பார்த்து
வம்பலருங் காட்டகத்தே வகையுடனே சொல்லுமென்று
கேளாய் நீ அண்ணாவே கீர்த்தியுள்ள அன்னியனே
சூளுஞ் சடையுடனே சோதிக்க வந்தவள்தான்
தில்லைவனத்தில் சிவனாருடன் கூடி

44. தொல்லையில்லாதாடிதோறாத காளியம்மாள்
பாறாய் படைவீட்டில் பட்டணத்துச் செட்டிமக்கள்
வீரகன்னிதன்னை வியாபகம் பண்ண வேணுமென்று
பூங்கொடியை மாலையிடப் போயினானிருக்கையிலே
தாங்கி யெனக்கு முலைதாவிக் கொடுத்தாள்காண்
மாந்தளி போல மேனியரை மாலையிடப் போகையிலே
முதுகில் கல் அம்பு மூரிவில் லுந்தானேந்தி
ஆதின பின்னே வாரவனும் அனழகன் அர்ச்சுனனும்
யிருவருக்கும் பின்னாக யிவையிடையே வார்வள்தான்
அரியள புத்திரனுன் அண்ணன் கர்ணனென்று சொல்லி

45. கேட்டு மனமகிழ்ந்து கிருபையுடன் தன்மருமே
நாட்டமுடன் தம்பியரை நன்றாகத்தான் பார்த்து
முன்னே வருகிறவன் மொய் குழலாள் காளியென்றான்
பின்னே வருகிறவன் பிரியமுடன் அண்ணனென்றுன்
யிருவருக்கும் பின்னாக யிடையிடையே வாரவனை
அரியபுத்திரன் அண்ணனென்று சொன்னாயே

விந்தையுள்ள சாஷ்த்திரத்தை விரித்துரைத்த கண்மணியே
எந்த முறையை அடவாகச் சொல்லுமென்று
மூணு யுகம்நடந்து முற்கதையும் தன்மருக்கு
கிஷ்க்கிந்தப் பருப்பதமாய் கீர்த்திமலை நடுவே
பற்ப்பமா சூரனென்று பார்முடி ராட்சதன் காண்

46. சந்திர சூரியர் காண்டாதே காட்டகத்தே
யிந்திர நீல வனத்தில் இருந்தந்த றாட்சதன் காண்
பரமசிவனாரைப் பத்தியுடன் பூசை பண்ணி
அங்கையில் மானேந்து அரனாரே போற்றியென்று
சங்கரனே போற்றியென்று தவத்திலிருந்கையிலே
சூலமுடன் சங்கரனும் தோன்றினான் ராட்சதன்முன்
நீலச்சடையோனே நீள்கயிலை மான் மழுவும்
உண்பர்கள் நாயகரை உகந்ததொரு ராட்சதனும்
தும்ப மலரெடுத்துத் தோத்திரங்கள் பண்ணையிலே
தம்பிறான் றாட்சதன்மேல் சந்தோசந் தானாகி
நம்பி நீ வந்தவகைநாடு வேரங்கே கேளுமென்ன
வள்ளலே சங்கரனே வாழுஞ் சூடாமணியே

47. உள்ளங்கை பட்டவிடம் ஓங்கியெளுந்திருந்து
காலும் பெருவிரலால்க் கைவிரலொன்றிலுந்தான்
நாலு விரலுந்தாள் நால் சக்கிரந்தான் சுழட்டி
கீர்த்தியுள்ள தர்மாவுமகிழக் கண்ணால் தான்பார்த்து
வண்ண முகமுடைய வடிவுள்ள அருச்சுனரை
புண்ணியனை விட்டிருக்கப் பொருந்தத் தவனமது
கெம்பீரமுள்ளவனே கிரீடமளகியனே
தம்பியரைவிட்டுருக கந்தரிய நத்ததவனமது
சித்தம் மகிழ்ந்திருக்க தெளுத வனமனது

48. சிற்று மனமிரங்கத் தருமனாராயணரும்
கண்ணாரக் கண்டிருந்தாள் பாரான மேனியரும்

முத்தி பெறும் அர்ச்சுனனை முகம் பார்த்துக் கண்சிமிட்டி
கிண் சிமிட்டல் கண்டான் காண்டீபி அற்சுனரும்
தர்மனாராயணர் சொலத் தனஞ்செயனுந் தான் கேட்டு
உமையாள் திருநீற்றை உதறிவிட்டான் பாறையின்மேல்
நீரு நிலத்தில் விழ நீலவட்டப் பாறையின் மேல்
ஆறு போலப் பொங்கி அதிர நறும்புகை கிளம்பி
பாறையின்மேல் கினிதரன் படர்ந்து புகைகிளம்பி
திக்குத் திசையும் தெரியாமல் தீயெழும்பி
அக்கினியுந் தீயெளும்பி ஆர்ப்பரித்து நின்றதுவே

49. பாங்குடைய கம்பமெல்லாம் படர்ந்தது காணக்கிளியும்
ஓங்கி வளர்ந்ததுவே ஒரு நொடியில் அக்கினிதான்
விண்ணுமண்ணுமொன்றாக மேகஞ் சுவறியிட
கண்ணுக்குத் தோணுது காண்டீபி அர்ச்சுனனை
வாகாயொரு நொடியில் வளர்ந்தது காண் அக்கினியும்
தக தக டும் டும் றாட்சதர்கள் தல மீதில் வைய்த்தார்கள்
அக்கினியைப் பத்த அரியவரந் தாருமென்ன

50. முந்தியே ராட்சதனும் முக்கண்ணன்முன் கைநீட்ட
சந்தோசமேயென்று வரஞ் சங்கரனும் தான்கொடுக்க
இந்த வரம் வாங்கி இது பலிப்பு பார்க்க வென்று
மெய் மகிழ்ந்து றாட்சதனும் மெத்தப் பிரியமுடன்
கையெடுத்தப் பார்த்துக் கணலெரியக் கண்டபின்பு
பரமன் கொடுத்த வரம் பதிபார்க்க வேணுமென்று
விரிவான காட்டகத்தே வேறொருவர் காணாமல்

51. ஒருவரையுங் காணாமல் ஓடிவந்த றாட்சதனும்
திருவான சங்கரனே கொற்றவனும் பார்க்கவென்று
ஒருவரையுங் காணேன் நான் ஓங்கு வனந்தனிலே
யெம்முடைய நாயகனாரிப்பக் கொடுத்தவர்ம் (வரம்)
உம்முடைய தலையில் வைத்து உகந்து நான் பார்க்க வேணும்

செம்மையுடன் தலையில் சேரவந்து காட்டுமென்ன
அம்மையுமை பாகா அரனார் மிகப் பார்த்து
சண்டாள ராட்சதற்கு தடுக்க வரங் கொடுத்தோம்
அண்டாத கோபம் அக்கினிவரங் கொடுத்தோம்
வாட்டமில்லாக் கானகத்தில் வளமாகக் கொண்டுவந்து
தீட்டினமரத்தில் திரமாகத் தோக்குமென்று
மாயேஷ்பரனும் மயங்கித் தெளிவு வந்து

52. வாயுந் திறவாமல் வகையென்றுந் தோணாமல்
காட்டகத்தே நோக்கிக் கங்காதரனாரும்
வண்ணெஞ்சே றாட்சதனும் வரங் கொடுத்த சங்கரரை
பின்னேதுடந்து வரப் பிக்கரலா முன்னோட
அறும்பு வனத்தில் அரனாரும் ஓடிவந்து
திரும்பியே பார்க்கையிலே சீர்கெட்ட ராட்சதனும்
துங்கமுடி ராட்சதனும் சத்திய வனாடிவர
தங்குமிடங்க ளெல்லாஞ் சண்டாளன் வாரானே
...ங்குமிடங் காணாதயேங்கியே சங்கரனும்
அங்கொரு அய்வர் வில்வணபுகுந்தாரன்னேரம்
மெய்வரந்த ராட்சதனும் மிஞ்சி வராரெனவே

53. அய்விரலில் காயில் அமர்ந்து யொளிந்திருந்தார்
அரனார் ஒளிந்தசெடி அதினருகே நின்று கொண்டு
வரமெனக்கு தந்து மறைந்து ஒளிந்தீரே
மெய்வரமாய்யெனக்கு மீண்டு வரங் கேட்டால்
உன்னை விடுவானோ ஒருவருஷமானாலும்
தப்பாமலுந்தன் தலையிலே கையை வைத்து
யிப்போது நீ தந்த வரமீடேற நான் பார்த்து
அப்போதறிந்து அடவாகப் போவதல்லால்
மெட்டாத தூரம் முன்னையிப் போ விடுவரோ
விட்டு நான் போரதில்லை வெளியே வா சங்கரனே

54. யென்று சொல்லி ராட்சதனும் இருந்தவிடந்தனிலே
தாலியே காலில் தரித்திருந்த சங்கரனும்
பாவிக்கித் தான்பயந் துயிருந்த தரும சங்கரனும்
அதுரத்துக் கோடியசைந்தால் அறிந்து கொள்வானெனவே
பதுங்கிப் பதுங்கிப் பயதிருக்கும் வேளையிலே
பைகொண்ட நாகம் படுத்திருக்கப் பள்ளிகொள்ளும்
வைகுந்த நாறாயணர் மனதிலேதான் தெரிந்து
சந்திரசேகருஞ் சதி செய்தாரென்று சொல்லி
பைரவர் பள்ளிகொள்ளும் பரமனாறாயணரும்
அய்வர் வித்தோப்பு அவ்வனத்தே வந்து நின்று

55. கஞ்சாவெறியாலுங் கடுமயக்கந் தன்னாலும்
அஞ்ச லென்ற றாட்சதற்கு அகோர வரங்கொடுத்து
அஞ்சிப் பயந்துநீ அய்விரலிக்காயிலுள்ளே
விளிந்து யிவனுடையவென்று கொள்ளமாட்டாமல்
ஒளிந்துருக்கிறாறோ உமைபாகரென்று சொல்லி
யிந்த வடிவுடனே இருச்சதன் முன் போனாக்கால்
வந்தவனு நம்மை வகையாகக் கொல்வனென்று
பெண் கோலங் கொண்டவனைப் பெலிகொள்ள வேணுமென்று

56. ஆசை கொண்டடேனுன் மேலே அகலப் போவென்று சொன்னான்
மோசமது பண்ணாதே மோகினியே யுந்தனுக்கு
தோசம்வந்து துடறுதோ பெண்கிளியே
வாசமலர்க் குளவி என்னை வரவேண்டாமென்றாயே
அவ்வார்த்தை கேட்டு ஆரணங்குயென் சொலுவாள்
நில்லா மனதல்லக் காண் உன்னையே யென்கணவன்
வாராயே பத்தாவே வார்த்தையது கேளாமல்
சீராக நானும் பேர்த் தீர்த்தங்களாடி வந்தேன்
பன்னிரெண்டு ஆண்டு தெவம் பண்ணியே யென்கணவன்

ஒன்னையுந் தீண்ட இல்லையென பத்தாவே
யிச்சையுடனே நீ இருந்த தவநிலையில்

57. அச்சமத்து உன்மேலே ஆன்பறவைகள் தான்
பச்சிகளுமெச்சிவிட்டுப் பல்லுகளும் பாசிபத்தி
வேசங்குலைந்தலவோ வீணே தவமிருந்து
தோசங்கள் தீரச் சுணையில் நீராடி வந்தால்
நேசமுடன் நின்றார்கள் நீண்டதொரு பஞ்சணைமேல்
நாட்டியிதம் பேசி நன்றாக நாமிருவர்
கட்டிக் கலந்திருப்போம் கொற்றவனே யென்புருஷர்
நானுமுமைத் தேடி நாடித் தவமிருந்தேன்
வந்தது குமுந்தனுஞ் காய்வந்தீயோயெங் கணவா
புண்ணியனே உன்முகத்தைப் போதநான் கண்டதில்லை

58. வனவாசம் வருகை பெற்றேன் வடிவழகா உன்னாலே
யென்று மடந்தை யெடுத்துரைத்த சொற்கேட்டு
நல்லது யென்மயிலே நல்லெண்ணை வேணுமென்று
பெண்மயிலாளென்னைப் போதவே தான் கொடுத்து
வாங்கிவந்த யென்னை மதிகெட்ட ராட்சதனும்
பாங்கிப் பரையென தலையில் பரிவாகத் தேயும் என்னை
நீண்ட புருவமுள்ள நேரிழையும் என்ன சொல்வாள்
நீண்ட வொண்ணா தென்று சொல்லத் தேன் மொழியாளப்போது
பூண்ட மயலாலே பொறி கலங்கி ராட்சதனும்
அவன் கையை நீட்டிஎன்னை அடவாக ராட்சதனும்

59. சிக்கெனவே யென்னை தேச்சு வருகையிலே
அக்கினியாய்ப் பாய்ந்து அவனெரிந்து போனானே
முத்தி தருஞ் சங்கரரை முடுகி வந்த ராட்சதனும்
பத்தி யெறிந்து பாதாளம் போய் விழுந்தான்
புத்தி வந்த றாட்சத்னும் உகமாண்டு போனபின்பு
சித்த மகிழ்ந்து சிரித்தாளே மோகினியும்

மண்ணளந்தாரங்கே மனமுமிக்க குளுந்து
பெண்வடிவு விட்டுப் பெருமாளெனும் வடிவாய்
ஆ வடிவு கொண்டு சதாசிவனைஞ் தேடிவந்து
மெய் தளர்ந்து நீர் பயந்து மேனியெல்லாந் தானொடுங்கி
அய்விரலிக் காயி அளுந்துகின்ற சங்கரரே

60. அடுக்குமோ சங்கரரை அற்பாயிசு ராட்சதற்கு
கொடுக்கும் வரனறிக அகோரவரங் கொடுத்து
கடுக்க வரியாமல்தாவியந்த காயிலுள்ளே
படுத்திருக்க நீதியோதான் பரமசிவனாரே
அழியாவரங் கொடுக்கு அரனாரே யிப்போது
ஆகந்தனை நினைந்து அரும்பாவி தன்னைக் கொல்ல
மோகினி யேஷங் கொண்டு மோகமாய் நாரணரும்
வட்டமதி முகமும் வாள் விளிவும் பல்லொளியும்
பைய வுளக்கையும் பருமுத்துத் தாவடமும்
தெய்வ கன்னி போலாகாயச் சிரித்த முகம் பார்த்து
வட்டமுற்ற கன்னி வந்தாளே ராட்சதன்முன்
காட்டகத்தே வந்ததொரு கன்னிதனைப் பார்த்து
பண்ணார் தவமிருந்த பரந்த ராட்சதர்முன்

61. பெண்ணாசை கொண்டு பெறுக்க மதி மயங்கி
வாணுதலைக் கண்டு மயங்கியே ராட்சதனும்
மூணரை னாளி தைதான் மூற்சையது தானாகி
பாவையே பெண்கொடியே மூற்சையது தானாகி
ஆவலுடன் கட்டி அணைய வந்தான் ராட்சதனும்
அன்னேரம் மோகினியும் அவளையே நில்லுமென்று
மின்னேரிடையாளும் வீரமுடனேது சொல்வாள்
சதிரான காட்டிலுள்ளத் தான் வந்தனையா
பதறுதே கேளுமெந்தன் பத்தாவே சொல்லுகிறேன்
யென்று வருவையென்று யிருந்தேன் பெருந்தவசு

62. மண்ணின் பெருந்தவசு பலித்துதையா பத்தாவே
நீண்ட சடையோன் பாதம் நீ தானே நின்றதவம்
பூண்ட தவமுனியே புண்ணியம் யென்புருஷர்
தீண்டாமலென்னையும் நீர் சீறாக நில்லுமென்றாள்
அன்னேரம் றாட்சதனும் அறிவுமிகக் குலைந்து
பெண்ணே மயிலே பொற்கொடியே மோகினியே
உம்பர் தொழுஞ் சங்கரனார் உகந்து வந்தங்கேது சொல்வார்
செகமளந்த மாயவனைச் சீராமர் அருச்சுனனே
சுகமாயிருந்தீரோ சொல்லுமென்றார் சங்கரனும்
அப்பப் பெருமாள் ஆறாளைத்தான் பார்த்து
செப்பமுடன் தான் சிரித்த வருமென்று சொல்வார்

63. அறைக்கு ராட்சதர்க்கு அனந்த வரங் கொடுத்து
இன்றிந்த காயினுள்ளே யிருந்த சுகமில்லாமல்
கெங்கைச் சடையாரே கீர்த்தியுள்ள யீஸ்பரரே
ஆனாலுங் கேளுமையா அவனினைந்த காரியங்கள்
வானுலகில் தேவர்களை வதைசெய்து கொல்லவென்று
ஆலனுடனறிய அருந்தவசு ராட்சதனும்
பாகையாய்த் தங்கிருந்த பரும பாவி றாட்சதற்கு
நானுமொரு வகையாய் நன்றாகக் கொன்றுவிட்டேன்
யென்றவருஞ் சொல்லயேது சொன்னாரீஷ்பரரும்
நன்றாய் மலரெடுத்து நவசிவாயமெனவே

64. சீறாக நீரெடுத்துச் சிவனே சிவாயமென்று
ஆறொருவரானாலும் அர்ச்சனைப் பண்ணினாக்கால்
கேட்டவரங்கொடுப்பேன் கீர்த்திபெற வேணுமென்று
நடக்கும்படியே நடந்து கொள்ள மாட்டாமல்
யென்றவன் யென்மேலே யிடும்பு செய்த றாட்சதனை
மாத்தி விட்டுக் கொல்ல வகையிரு வீரமாயவரே
நானா வரம் வாங்கி நம்மை யெதுத்தவரை

வானாலை வாங்கி வகையருவீர் மாயவரை
வந்து வழிமறித்து வனத்தில் துடந்தவரை

65. வெளியே நீ வாருமையா யென்று வந்தேன் றாட்சதனை
யென்று மொழி கேட்டு ஈசுபரனுமிகப் பயந்து
அன்று வரம் வாங்கி அருகே துடந்துவந்து
வந்தி அழைக்கிறான் மாபாபி றாட்சதனும்
இந்த விடங் கண்டால் யினியிருக்கத் தாவுமில்லை
யென்னையுங் கண்டால் யினியெங்கேதான் போவேமென்று
பின்னையுங் காயிலுள்ளே பித்தா பிதுங்கையிலே
நாரணரும் நன்றாகத் தான் பார்த்து
வாறாய் நீ சங்கரரே மாயவருந் தானல்லோ
நயப்படுத்தி ராட்சதனை நான் கொன்றுவிட்டேனையா
பயப்பட வேண்டாங் காண் பாரளந்தானாலவோ
பதிபார்க்க வந்ததொரு பற்பமா சூரனுந்தான்

66. சதி பண்ணிக் கொன்று விட்டேன் சங்கரரே வாருமையா
மாபாபி தானு மும்மை வந்துடந்தலவோ
ஆபாதகனை நான் அதம்பண்ணி விட்டனையா
றாட்சதனு நான் லக்காண நாராணாரென்று சொல்லி
அப்போது யீசுபரரைக் கண்ணாலே தான் பார்த்து
தப்பாமல் சொல்வாய் தரணியளந்தவனே
உம்பருஞ் சோலை உலகளந்த மாயவதாரே
நம்புவறோ நான்தானும் நாராயணர் தாமோ

67. சற்பனை செயவந்த சண்டாள றாட்சதனை
கன்னியாய் வந்து கவடுபண்ணிக் கொன்றுவிட்டேன்
நெருப்பு வானங் கொண்ட நெப்டூர ராட்சதனை
சிரிப்பாய்ப் பரியாசமுடன் சீர்கெடவே கொன்றுவிட்டேன்
அப்பகையாத் தானும் அரனே யென் வார்த்தைதனை
நம்பியே வாருமென நாராயணரழைக்க

யெந்த வடிவாயிரக்கடித்து மாயவரே
அந்த வடிவை அடவாகக் காட்டுமென்று
விந்தையுடனே விரிசடையோன் கேட்டிடவே
சோதி வடிவழகன் துளசிமணி மார்பளகன்
ஆதி நாராயணரும் அடவுடனென்ன சொலுவார்
நாட்டமுடன் ராட்சதனை நான் கொன்ற வேகமது
காட்டு வேகம் கலங்காதிருப்பிறோ
கருத்த மிடத்தாரே கங்கைச் சடைவாரே

68. பொறுத்து மிருப்பீரோ பெண்கோலங் கண்டாக்கால்
பொங்கரவஞ் சங்கு பூண்டிருக்குஞ் சங்கரனே
மங்கையரைக் கண்டாக்கால் மயங்காதிருப்பீறோ
யிரணிய ராசாக்களையும் மயிரு பிளவு செய்தானே

69. துங்கிய கன்னியறுபத் தொன்றி வந்த ருனாக்கால்
கலங்காமல் பார்த்துக் கொண்டிருப்பேன் மாயவரே
கச்சணிந்த கொங்கை கனஷ்த்தனமும் பாவினையும்
மெச்சி மனமகிழ்ந்து மெல்லியரைத் தான் பார்த்து
யெச்சரிக்கையாக யிருப்பேனானேக வண்ணா
காட்டு வாயுன்வடிவை காணவே வாருமென்று
கேட்ட பொழுதே கிளமொழிக் கன்னியறாய்
நாட்டில் கிடையாத நாயகியாள் வந்து நின்றாள்
பெண்மயிலைக் கண்டு பொறுத்திருக்க மாட்டாமல்
வருத்தமுடன் வந்தவரும் மாணிக்க மோகினியரை
கருத்தாலருகழைத்துக் கட்டித் தழுவையிலே
மந்திர மூர்த்தி மகாதேவர் தம்முடைய
மட்டிடவே கலந்த மாயர் வருகையிலே

70. பட்டுவிட்டான் றாட்சதனும் பாலகனும் வந்துநின்றான்
நின்றதொரு பாலகனை நெடுமாலென பிள்ளையேன்
அன்று அரனார் அரனாரென் பிள்ளையென

ஒருவர்க் கொருவர் ஒப்பி ஒரு மனதாய்
யிருவரும் பாலகனை யேந்தி யெடுத்தணைத்து
அரியர புத்திரனென அழைத்தவரும் பேருமிட்டார்
வரிசையுள்ள தாருகா வனத்திலிருமென்று வைத்து
பெண்கோலம் விட்டுப் பெருமாளெனும் வடிவாய்
மண்ணுலகம் வைகுந்தம் வந்திருந்த மாயவனார்
கடுக்கைச் சடையானும் கயிலைமலையானும்
மங்கையுடனே மகாமேரில் வீற்றிருந்தார்
கொத்த முரசுக் கொடியுடைய அண்ணாவே

71. அந்த முறையதனால் அண்ணர் நமக்காகுமென்று
யென்று சாகாதேவன் எடுத்தரைத்த சொல்கேட்டு
அன்று தன்மரும் . . .அதிகப் பிரியமுடன்
கட்டியணைத்துக் கனகப் பிரியமுடன்
யிட்ட முத்துமாலைதனை யிந்தாவெனக் கொடுத்தான்
மன்னன் சகாதேவன் வரிசையுடன் சொன்னகதை
அப்போது மூவருந்தான் அந்தவனங் கடந்து
மண்ணளந்தார் கேட்டு மகிழ்ந்திருந்தாரன்னேரம்
தப்பாமல் வந்தார்கள் தன்மதிருப்பிடத்தில்
காளியரைக் கண்டு கருகியெழுந்திருந்து
வாள் வரலியகையான் வணங்கி மிகத் தெண்டனிட்டு
தெண்டனிட்ட பஞ்சவரை சீறாகத்தான் வாழ்த்தி

72. மாயவரை கண்டு மனமகிர்ந்தார் காளியரம்
அரியர புத்திரனும் அம்மையவள் காளியரும்
பெருமாளுடன் மூவரும் (மூவர்) பூமேடை வீற்றிருந்தார்
பஞ்சவரும் பத்தினியும் பரிவாக நிற்கையிலே
உத்திருந்து பாத்தவரை உக்கிரமா காளியரும்
பண்டு மகாறாசன் பெற்ற பாறாளுந் தன்மருமே
காண்டீபி அருச்சுனனைக் கயிலை மலைக் கனுப்பி

73. காசினியை யாண்டு கனமாக வாழ்ந்திருப்பீர்
பத்தினி குந்தி பெற்ற பாலகரே தாமாவே
புத்தி சொல்லக் கேளாய் பொங்கமுடனப் போது
சங்கரனார் பொன்மலைக்கி தனஞ்செயனும் அருச்சுனனை
அனுமானமில்லாமல் அரனார் பதந்தொழுது
தருவான பாசுபதம் சங்கரனுந் தான்கொடுப்பார்
அரனார் கொடுத்த வரம் அதம்பண்ண நூற்றுவரை
பரமன் கிருபையினால் பாராள வல்வீர்கள்
யென்வார்த்தை கேட்டு இனி அனுப்ப வேணுமென்று
வல்ல புகள் காளி வகையாகச் சோலையிலே
நல்ல தென்று தனமர் நாயகியைப் போற்றிசெய்து

74. வாயார வாழ்த்தி வாகையாய் விடை கொடுத்தாள்
மாயவரைத் தானும் வணங்கியே காளியம்மாள்
தாயாரும் பார்க்கலுற்றாள் தலங்களிருப்பிடத்தே
தில்லை வனத்தில் றிரமாக வீற்றிருந்தாள்
அரியர புத்திரனும் அச்சுதனார் தான் பணிந்து
பரிவான தன்மருக்கம் பத்தினிக்கும் சொல்லிவிட்டு
விரிவான காட்டகத்தே மீண்டு திரும்பிவந்து
சாலையிருண்டதொரு தாரக வனம் புகுந்து
காலை வயிரவனைக் கண்டவனும் வீற்றிருந்தாள்
அந்த சமையத்தில் யாதியறு ளானார்

75. வந்து தன்மனாயன் வந்தங் கேது சொல்வார்
உன்தம்பி அருச்சுனற்கு உமைபாகாபக்கலுக்கு
தனுவாங்கி அற்சுன மதங்காமலிங்க வர்
அனுப்பிவிடுமென்று சொன்னார் ஆதியரளாளர்
அவ்வார்த்தை கேட்டு அரசாளுந் தன்மருமே
ஒவ்வார் மனத்துடனே ஒரு வார்த்தை யேறுசொல்வார்
கேளாய் நி ஆண்டவனே கிரீடமழகியனே
ஆளாளழகியனே அனுப்புகிறேனனபடியே

யிந்திரர் நீலமாகயிருக்கும் அந்தப் போர்வனத்தே
யெந்த வகையாலிருப்பான் பெருந் தவசு
அந்த வகை நானும் அரிவே காட்டாக்கால்
சந்தோசமாகத் தம்பியரை அனுப்புகிறேன்

76. பண்ணுமருந் தவசு பண்ணுயானென்கிறதை
கண்ணாரக் கண்டு காண்டீபி அனுப்புகிறேன்
நாட்டிய தூணில் வந்த நரசிங்க மூர்த்தியனே
காட்டுமென்று சொல்வீர்கள் காண்டீபி அருச்சுனனை
யிந்த வகைக் கேட்டு யெம்பெருமாளேது சொல்வார்
உன்தம்பி அர்ச்சுனன் தான் உன்வார்த்தை கேளானோ
. . . கனிற்த தர்மர் உன்தம்பி தன்னை
கேளுமென்னார் நீ உள்ளந் . . . ணரும்
. . . ன்று தர்மர் அம நாராயணார் சொல்ப்படி மகிா
. . . வீறா வாராய் நி தம்பியென்று
. . . கும வாருதனைத் தம்பிதனைக் காட்டினாக்கால்
. . . யுந்தனையும் நாடியனுப்புகிறேன்

77. அன்புடைய தன்மர் அடவாகக் கேட்கையிலே
தவமுடைய அர்ச்சுனனுந் தவசுநிலை காட்ட
பார்த்திபன் தான் கொடுத்த பார்த்திரு நிரதையும்
வகையான தர்மர் முன்னே வண்மையுடன் தன்போட
அன்புடனே பெருமாள் அருகே மகிழ்ந்திருக்க
மாயத்திருநீறு வளந்துதேகம் பட்தாய்
. . . ணுத் தடிக்கம்பந் தோன்றி வளந்துதங்கே
. . . கும் விண்ணுக்கும் மகாமேரு போலே தான்
. . . வவனளந்து ஓங்கிய கம்பதை
. . . ககங் கண்டலவோ காயாம்பூ மேனியரும்
. . . பம்தாக நீண்ட தொரு கம்பமதில்
. . . அப்ப அளவார்க்குதித் தேரி